
# கீதாசார்யன்




# கீதாசார்யன்-33

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 3 | துர்மதி ௵ | ஆனி ௴ | ஜூன் 81 | பகுதி 9



ஆசிரியர்:
M. A. வேங்கடகிருஷ்ணன், M A., M Phil.

**இயக்குநர் குழு :**

T C. A ராமாநுஜம்
M.A. B.L., I.R.S. (தலைவர்)
N. கணபதி
விற்பனை இயக்குநர்
R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்
P. T ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு :**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V. ராமாநுஜம்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# நமது கடமை



ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை பாரத தேசம் முழுவதும் கட்டுக் கோப்பாக இருக்கும்படி பரப்பிய பெருமை ஸ்ரீராமானுஜரைச் சாரும். அவருக்குப் பின்வந்த ஆசார்யர்களும் அவருடைய திருவடிச் சுவடுகளை பின்பற்றி நம் ஸம்ப்ரதாயத்தை அவ்வப்போது காத்து வந்தனர்.

ஆனால் தற்போது சமூக நிலைகள் மாறி, மக்களிடத்தில் வைதிக சிரத்தை மிகவும் குறைந்து வருகிறது. வைதிகராய் இருப்பது கௌரவக் குறைவு என்று எண்ணுமளவுக்கு மனப்பான்மைகள் வளர்ந்து விட்டன. வேதங்களையும் திவ்யப்ரபந்தங்களையும் கற்பதற்கு முன் வருபவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். நிலைமை இப்படியே போனால் வைணவத்திற்கு நல்லதல்ல.

இந்நிலைமையை மாற்றி, அனைவருக்கும் வைதிகத்தில் சிரத்தை ஏற்படும்படி செய்ய வேண்டியது வைணவ ஸம்ப்ரதாயத்தில் செல்வாக்குள்ளவர்கள் ஆற்ற வேண்டிய முதல் கடமை. எண்ணற்ற மடாதிபதிகளையும் ஆசார்ய புருஷர்களை பெற்றிருக்கும் நான் நினைத்தால் நிச்சயம் முடியு.

ஒவ்வொரு மடாதிபதிக்கும், ஒவ்வொரு ஆசார்ய புருஷருக்கும் தனித்தனியாக சிஷ்ய சபைகள் உள்ளன. தவிர எண்ணற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸபைகளும் உள்ளன. இவையனைத்தும் ஒருங்கிணைந்து இப்பணியை மேற்கொள்ள வேண்டும்; ஆங்காங்கே திவ்யப்ரபந்த, வேதபாடசாலைகளை நிறுவி, இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும்.

கீதாசார்யனும் இப்பணிகளில் தன்னாலியன்ற வரை உழைக்கத் தயாராயிருக்கிறான். ஆஸ்திகர்கள் தங்களபிப்ராயத்தையும் ஆலோசனைகளையும் கீதாசார்யனுக்குத் தெரிவிக்கலாம்.

# பார்த்தன் பள்ளி

**அவனுக்கும் ஆசையுண்டு! :** பகவானை அடையும்வரை தான் நமக்கு ஆசை முதலானவை! அவனை அடைந்து விட்டால் ஆசை எல்லாம் நீங்கி விடுகிறது! என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். 'நாம் பூமியில் ஒருவருக்கு மகனாகப் பிறக்க வேண்டும்! எல்லோருடனும் பழக வேண்டும். நம் குணங்களைக் காட்ட வேண்டும்! அனைவருக்கும் உதவ வேண்டும்' என்பது பகவானின் ஆசை! பகவான் நம் மீது இயல்பாகவே கொண்டிருக்கும் இரக்கத்தினடியாகத் தோன்றியது இந்த ஆசை! ஆனந்தமயனாக இருக்கும் எம்பெருமானை மகனாகப் பெற்றெடுக்கும் தாய், 'இவன் என் மகன்' என்பதோடு மனநிறைவு அடைவதில்லை! தன் மகனின் அழகையும், அவனது ஒவ்வொரு

## ஸ்தலசயனத்துறைவார்

செயல்களையும் புதிது புதிதாகக் கண்டு மகிழவேண்டும் என்று ஆசைப்படுகிறாள்! இது இணையற்ற (விலக்ஷணமான) ஆசை! அருச்சுனனும் கண்ணனும் பிரியவே மாட்டார்கள்! பார்த்தனும் ஸாரதியும் இருக்குமிடத்தில் வெற்றித் திருமகள் நிலைத்திருப்பாள். பார்த்த-ஸாரதி என்ற இரண்டு பெயர்களும் ஒன்று சேர்ந்த பெருமான் எழுந்தருளி இருந்தால் அந்த இடத்தைத் திருமகள் நோக்கிக் கொண்டே! இருப்பாள் பகவான் நின்றவாறும், இருந்தவாறும், கிடந்தவாறும் பல இடங்களில் எழுந்தருளி இருக்கிறான். இந்த மூன்று நிலைகளிலும் பகவானை ஸேவிக்க ஆழ்வார்கள் ஆசைப்படுகிறார்கள்! அர்ச்சுனனுக்கும் இந்த ஆசை உண்டு. மஹா பாரதப்போர் தொடங்கும் முன் அர்ஜுனன் கண்ணனின் உதவியை நாடி அவனிருக்குமிடம் சென்றான். அப்போது கண்ணன் சயனித்துக் கொண்டிருந்தான்! 'ஏரார் கோலம் திகழக்' கிடந்திருப்பதை ஸேவித்து நின்றான். தேரோட்டியாகித் தேர்மீது அமர்ந்

இருக்கும்போது வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவித்திருக்கிறான். நின்ற திருக்கோலத்தில் காண ஆசைப்பட்டான். கண்ணன் பார்த்தன் பள்ளியில் நின்ற திருக்கோலத்தில் ஸேவை ஸாதித்தான். நின்று நம்மை அழைக்கிறான்.

**பான்மொழியாள் பாடுகின்றாள்:** திருமங்கையாழ்வாருக்கு பார்த்தன் பள்ளியில் மிகவும் ஈடுபாடு! இந்த எம்பெருமானின் ஸௌந்தர்யத்தில் மூழ்கித் திளைக்கிறார். தாயாகவும் மகளாகவும் இருந்து அனுபவிக்கிறார். பங்கயக் கண்ணழகில் மயங்காதவர் யார்? கண்ணனின் கண்ணழகைப் பற்றித் தாய் அடிக்கடி மகளுக்குக்கூறுவாள். இக்காரணம் பற்றியே எல்லோரும் 'கண்ணா! கண்ணா!' என்று அவனை அழைக்கிறார்கள் என்றும் கூறுவாள். இந்த மகளும் கண்ணா! என்று அழைக்கத் தொடங்கி விட்டாள். அவள் அழைக்கும் அழகையே பார்த்துக்கொண்டிருக்கிறாள் தாய்! 'நானும் பலமுறை கண்ணா! என்று கூறுவதுண்டு! ஆனாலும், இவள் அழைப்பது போல் என்னால் அழைக்க முடியவில்லையே!' என்று தனக்குள் பேசிக் கொள்வாள்.

ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் திருவரங்கனை அழகிய மணவாளா! என்று எல்லோரும் தான் கூறுகிறார்கள்! ஆயினும், ஆழ்வானின் திருக்குமாரர் பட்டர் 'அழகிய மணவாளா! என்று கூறும்போது இருக்கும் சுவை, மற்றவர்வர்களின் சொல்லில் இராது, என்று பெரியோர்கள் கூறுவார்கள். ஆம்! பட்டர் 'அழகிய மணவாளா!' என்றும், ஆழ்வான் 'பேரருளாளா!' என்றும், "அனந்தாழ்வான் 'திருவேங்கட முடையானே!' என்றும், மதுரகவிகள் 'தென் குருகூர் நம்பி!' என்றும் அழைப்பது போல் யாரால் அழைக்க முடியும்! இவர்கள் சொல்லும் போதே அண்ணிக்கும்! அமுது ஊறும்!

தாமரையாள் கேள்வ! என் மகன் கண்ணு! என்று அழைக்கும் அழகை நேரில் வந்துபார்! உன்னை தேவர்கள் வணங்குகிறுர்களாம்! நீ ஆனந்தமே வடி வெடுத்தவனும்! உன்னை உலக நாயகனே! என்கிறுன்! தேவ தேவன் என்கிறுன்! இவன் இசையோடு சேர்ந்த மென்மைப் பேச்சு டையவன்! 'மதுரா மதுராலாபா' என்று உன்னல் புகழத் தக்கவன்!' பார்த்தன்பள்ளி' என்று பலகால் புலம்புகிறுளே! நீ இன்னும் என் மகள் மீது மனமிரங்காது இருப்பதேன்? என்கிறுள்

**கண்ணனென்றும் வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும்**
**எண்ணனென்றும் இன்பனென்றும் ஏழுலகுக்காதி யென்றும்**
**திண்ணமாட நீடு நாங்கைத் தேவதேவனென்றென்றோதி**
**பண்ணனில் கல்ல மென்மொழியாள் பார்த்தன்பள்ளி பாடுவாளே!**

**சோழ வளநாடு :** சோழநாட்டைக் கூறும் போதெல் லாம் சோழ வளநாடு என்றே கூறுவது வழக்கம். கங்கை யிற் புனிதமாகிய காவிரியாறு பாய்ந்து குன்ருவளத்தைத் தருகிறது. நெற்களஞ்சியமாக விளங்குகிறது. சோழநாடு சிறப்புறுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆயினும் எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றுண்டு! திலத மன்ன திருநாங்கூரைப் பெற்றிருப்பதாலேயே சோழ மண்டலம் சிறப்புறுகிறது. திருமணங்கொல்லை, திரு வெள்ளக்குளம் (அண்ணன் கோயில்) பார்த்தன் பள்ளி ஆகிய மூன்று திவ்ய தேசங்களைப் பெற்றதால் திரு நாங்கூருக்குப் புகழ்.

திருமந்திரம், த்வயம், சரமசுலோகம் ஆகிய மூன்றினை யும் சேர்த்து ரஹஸ்யத்ரயம் என்று கூறுவார்கள். திரு மணங்கொல்லை திருமந்திரத்தை விளங்கச் செய்த இடம். திருமங்கை மன்னன் 'வாள் வலியால் மந்திரம் கொண் டார்.' திருவெள்ளக் குளம் த்வயார்த்தப் பிரகாசகம்!

பூவார் திருமாமகள் புல்கிய மார்பா!' என்று விளித்து திவ்ய தம்பதிகளின் சேர்த்தியில் கைங்கரியத்தைப் பிரார்த்திக்கிறார் ஆழ்வார்! பார்த்தன் பள்ளி என்ற இந்தத் திவ்ய தேசத்தில் பார்த்தஸாரதி அர்ஜுனனுக்கு எதிரில் நின்று 'மாமேகம் சரணம் வ்ரஜ', 'மாசுச:' என்று கூறுகிறான். ஆதலால், சரம சுலோகம் விளங்கிய இடம் என்று மகான்கள் மொழிந்தருள்வார்கள். உயிருக்கு நன்மை தரும் பொருள்களை மட்டுமே சோழ நாடு விளைவித்துக் கொடுக்கிறது' என்று நினைக்க வேண்டா! ஆத்மாவுக்கு நன்மை தரும் ரஹஸ்யத்ரயத்தை விளைவித்துக் கொடுத்துள்ளது! பிராட்டியே புகழ்ந்து பாடும் சிறப்புடைய பார்த்தன் பள்ளியைப் பெற்று ஸ்ரீ வைஷ்ணவ உலகினுக்குக் கொடுத்துள்ளது! வளநாடு வாழி!

**சொன்னாலும் தெரியாது!:** ஆழ்வார்கள் உபதேசம் செய்யும் முறையைக் காணவேண்டும்! தன்னுடைய நெஞ்சுக்கே உபதேசம் செய்வார்கள். நெஞ்சு, அக்கறையோடு உபதேசத்தைக் கேட்கும்போது 'நன்னெஞ்சே!' என்பார்கள்; கேளாத போது சாடுவார்கள்! நெஞ்சே! உனக்கு ஒன்று சொல்லுகிறேன்; கேள். நான் சொல்லப் போவது உனக்கே உனக்கே தெரியும்! எனினும், நீ திருந்தும் வரை உபதேசத்தை நிறுத்த மாட்டேன். நீ திருந்தியவனாக ஆகவேண்டும்.

எம்பெருமான் பரமாத்மா; நாம் ஜீவாத்மா; "ஜீவாத்மா அறிவுடையது! இந்த ஆத்மா சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டது! அழிவில்லாதது; மிகச்சிறியது: இன்பமயமாக இருப்பது! பகவானுக்கு சேஷப் பொருளாக இருப்பது." நாம் எல்லோரும் பகவானைச் சேர்ந்தவர்கள். அவன் நமக்குத் தலைவன்! அழிவில்லாதவன்! எங்கும் இருப்பவன்! வயது முதிர்ந்தாலும் இந்த உண்மையை சாத்திரங்களால் உணர்ந்து கொள்ள இயலாது! உபதேசத்

தினுலும், அனுபவத்தினுலும்தான் அறிந்து கொள்ள முடியும்! இதனைப் பிரகலாதன் மிகச் சிறு வயதிலேயே (பள்ளிக்குச் செல்லும் வயதிலேயே) அறிந்துத் தெளிந்திருந்தான். பகவானின் திருநாமத்தையே சொல்லிக் கொண்டிருந்தான். 'பகவான் இல்லை' என்பதை மகனுக்கு உணர்த்த வேண்டும் என்று இரணியன் எண்ணினுன். 'எங்கு உளன் கண்ணன்?' என்று கேட்டான்! எங்குமுளன் கண்ணன்' என்ருன் பிரகலாதன்! இந்தத் தூணில் இருக்கிருனு? என்று கேட்டான் தந்தை! 'இருக்கிருன்' என்ருன் மகன்! மகன் சொல்லியவாறு நாராயணன் இருக்கிருனு என்பதைக் காண முயன்ருன் தந்தை! ,பகவான், தான் எங்கும் இருப்பதைக் காட்ட வேண்டும்; நாம் ஸேவிக்க வேண்டும்' என்று விரும்பினுன் பிரகாலதன்! இருவரும் பகவானை (நரஸிம்மனை) சேவித்தார்கள்! பிரகாலதன் தன் தலைவனுன (ஸ்வாமியான எம்பெருமானை ஸேவிக்க ஆசைப் படவில்லையா! நெஞ்சே! நீயும் அவனைக் காண ஆசைப்பட வேண்டாமா!

பரம பதத்திற்கு (ஸ்ரீவைகுண்டத்திற்கு)ச் சென்று காண்கிறேன்; பாற்கடலுக்குச் சென்று காண்கிறேன் என்கிருய்! அருகில் இருக்கும் பார்த்தன் பள்ளிக்குச் சென்ருல் அவனை ஸேவிக்கலாமே! அருச்சுனனுக்கு உதவியவன் நமக்கு உதவமாட்டானு! அவனுக்கு ஸேவை ஸாதித்தவன் நமக்கு ஸேவை ஸாதிக்க மாட்டானு! அவன் மிகவும் எளியவன்! அடியார்கள் அவனைப் பணிந்தால், அவர்கள் இட்ட கட்டளைக்கு அவன் பணிந்து விடுவான். அவனை அடைவதே நம்பணி; நம்மைக் காப்பது அவன் பணி! பணி நெஞ்சே! நானும் பரம பரம் பரனை! நன்மை புண்டு! பிணியொன்றும் சாரா! என்கிருர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

> **ஒத்தமர ரேத்தும் ஒளிவிசும்பும் பாற்கடலும்**
> **இத்தலத்திற் காண்பரிய என்னெஞ்சே!-சித்துணர்ந்த**
> **தீர்த்தன் பள்ளிக்கிருந்து செப்ப வெளிநின்ருனை**
> **பார்த்தன் பள்ளிக்குள் பணி.**

*நூற்றெட்டு திருப்பதி-அந்தாதி (40)*

# இராமாயணச் சுவையமுதம்

[''ப்ரவிச்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவ லோசந:, விராதம் ராக்ஷஸம் ஹத்வா சரபங்கம் ததர்ச ஹ.''] பெருமாள் சித்திரகூடத்திலிருந்து புறப்பட்டுத் தண்டகாரணியம் புகுந்தாரென்று கீழே சொல்லிற்று. இங்கே ''ப்ரவிச்ய ஸ மஹாரண்யம்'' என்று சொல்லாம். து என்பதைப் ப்ரயோகித்தது சாஸ்த்ரரீதியிலே அர்த்த புஷ்கலம்; முன்னிருந்த விருப்பில் வ்யாவ்ருத்தியைக்

ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

காட்டும் துகாரம். அந்த வ்யாவ்ருத்தியை (ராஜீவலோசந:) என்கி றவிசேஷண பதம் மிகவும் விசேஷணமிடுவது ஸ்ரீராமாயணத்தில் பலவிடங்களிலும் காணப்படும். இது ஸ்வபாவோக்தியென்று கருதலாகாது. ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு விதமான கருத்தைத் தந்து இன்சுவை பயக்கும்.

மேலே (20-2) ''ஊநஷோடசவர்ஷோ மே ராமோ ராஜீவலோசந:'' என்ற விடத்திலே அற்புதமான கருத்தைக் கொண்டது இச்சொல். நிசாசரர்களை யழித்து வேள்வியைக் காக்க இராமனைத் தம்மோடு அனுப்பவேணுமென்று வேண்டிக்கொண்ட விச்வாமித்ர முனிவர்க்குத் தயரதன் விடைகூறுமிந்த சுலோகத்தில் [ராஜீவலோசந:] என்றது—முனிவரே! உம்முடைய வேள்விக்கு இடையூறு செய்யும் அரக்கர்களோ நிசாசரர்கள்—இரவிலே வந்து

நலிபவர்கள்; என்னுடைய ராமனோ அஸ்தமித்தவாறே கண்ணுறங்குபவன்; இவன் கண்விழித்திருந்து அந்த நிசாசரர்களோடு எப்படி போர்புரியமுடியும்? என்னும் கருத்துக் கொண்டது. ராஜீவமாவது தாமரை; அது ஸூர்யன் அஸ்தமித்தவாறே எப்படி மூடிக்கொள்ளுமோ அப்படி கண் மூடுமிளமையுடையவன் ராமன் என்று காட்டினபடி.

''ப்ரவிச்ய து மஹாரண்யம் ராமோ ராஜீவலோசந:'' என்கிற ப்ரக்ருத ஸ்தலத்திலோ வென்னில், இப்போது இருபத்தைந்தாம் பிராயத்திலே யிருக்கிற ராகவனுக்கு அப்பொருள் சொல்லவொண்ணாது. பின்னேயோவென்னில், அயோத்யாகாண்டத்தில் வனவாஸக்கட்டளை விளைந்த பின்பு இளையோனை நோக்கிப் பெருமாள் சொல்லுகையில் (22-29). ''மா ச லக்ஷ்மண! ஸந்தாபம் கார்ஷீர் லக்ஷ்ம்யா விபர்யயே, ராஜ்யம் வா வநவாஸோ வா வநவாஸோ மஹோதய:'' என்றார். இளையா! ராஜ்யலக்ஷ்மியை இழக்க நேர்ந்துவிட்டதே யென்று வருத்தங்கொள்ளாதே; ராஜ்யம் கிடைத்தாலென்ன? வனவாஸம் கிடைத்தாலென்ன? இரண்டும் நமக்குத் துல்யந்தான் என்று முதலில் சொல்லிவிட்டு, உடனே சிறிது விமர்சித்துப் பார்க்கில் இரண்டையும் துல்யமாக நினைக்கவே தகாது, 'வனவாஸம் நமக்குப் பெரும் பேறுகாண் என்றார். அது மனமாரச் சொன்னதாயிருக்குமோ? அல்லது மேலெழச் சொன்னதாயிருக்குமோ வென்கிற சங்கைக்கு இடமறும்படி மஹாரண்ய ப்ரவேசம் ப்ராப்தமானபோது உள்ளே பொங்குகிற ஹர்ஷம் கண்ணிலே தொடைகொள்ளலாம்படியாயி ரென்கிறது ராஜீவலோசந: என்பது. மஹர்ஷிகளின் பாத ஸேவையும் அவர்களின் விரோதி நிரஸநமுமாகிற மஹா பாக்யம் ப்ராப்தமாகிறதே யென்று திருக்கண்கள் மலர்ந்தபடி.

[விராதம் ராக்ஷஸம் ஹத்வா சரபங்கம் ததர்ச ஹ] இது ''பாணிபாதம் ப்ரக்ஷாள்ய ஆசம்ய'' போலே அமைந்தது.

ஆசமனத்திற்குப் பாணிபாத ப்ரக்ஷாளனம் அங்கமாறுப் போலே சரபங்க மஹர்ஷி தர்சனத்திற்கு விராதவதநம் அங்காநுஷ்டானம் போலும். "ரிக்தஹஸ்தஸ்து நோபேயாத் ராஜாநம் தைவதம் குரும்" ஆகையாலே சரபங்க மஹர்ஷியைக் காண விராதப்ரேதத்தைக் காணிக்கையாகக் கொண்டார்போலும்.

["வஸதஸ் தஸ்ய ராமஸ்ய வநே வநசரைஸ் ஸஹ, ருஷயோப்யாகமந் ஸர்வே வதாயாஸுர ரக்ஷஸாம், ப்ரதிஜ்ஞாதச்சராமேண வதஸ் ஸம்யதி ரக்ஷஸாம்"] பெருமான் தண்டகாரணியத்திலெழுந்தருளியிருக்கும் போது மஹர்ஷிகள் வந்து ராக்ஷஸர்களை வதம் செய்யவேணுமென்று சரணுகதி செய்ததாகவும், பெருமாள் அப்படியே வதம் செய்வதாக ப்ரதிஜ்ஞை பண்ணினதாகவும் இங்குச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே திருவவதாரத்திற்கு முன்பு தேவதைகள் ராவணனை வதம் செய்ய வேண்டிக் கொண்டதாக *ஸ ஹி தேவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபிः அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந* (அயோ 1-7) என்கிற சுலோகம் காட்டுகின்றது. தேவர்களோ மஹர்ஷிகளோ தங்களைக் காப்பாற்றும்படி பிரார்த்திப்பது யுக்தமேயல்லது பிறரை வதம் செய்ய வேணுமென்று இதையும் வாய்விட்டுப் பிரார்த்திக்கலாமா? பிறரால் தங்களுக்கு நலிவு ஏற்படாதபடி செய்தருளப் பிரார்த்திப்பதன்றோ அழகியது. மேல் ஆரண்ய காண்டத்தில் "தே வயம் பவதா ரக்ஷ்யாः என்றும், *ரக்ஷிதவ்யாஸ் த்வயா சச்வத் கர்ப்பபூதாஸ் தபோதநாः* என்றும் கோரினப்போலே பிறருடைய வதத்தை ப்ரஸ்தாவியாமல் தங்களுடைய ரக்ஷணத்தை மட்டும் ப்ரார்த்தித்தால் போராதா? பெருமாளும் அப்படியே உங்களை ரக்ஷிக்கிறேனென்று வாக்தானம் செய்தால் போதுமே. *ப்ரதிஜ்ஞாதச்ச ராமேண வதஸ் ஸம்யதி ரக்ஷஸாம்* என்னும்படி வதஞ் செய்து விடுகிறேனென்று சொல்லியிருக்க வேண்டாவோ. பிறரை வதஞ் செய்யாமல்

தேவர்களையும் மஹர்ஷிகளையும் ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றினால் ஸர்வசக்தனான பகவானுக்கு இது ஆகாத காரியமன்றே, என்றிங்ஙனே சிலர் கேள்விகள் கேட்பதுண்டு.

*தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யம் அதி தைவதம் என்றும் *ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்* என்றும் *ஸமோஹம் ஸர்வ பூதேஷு* என்றும் ப்ரஸித்தி பெற்றிருக்கிற பகவான் வதம் செய்து விடுவதாக ப்ரதிஜ்ஞை பண்ணுவதன் கருத்து யாதெனில், ஆந்தனையும் பார்த்து வதமே செய்ய வேண்டி வந்தால் செய்வதாகச் சொன்ன வத்தனை; தேவர்களும் ரிஷிகளும் வதப்ரார்த்தனை பண்ணினது அரக்கர்களால் தங்களுக்கு நேர்ந்த பொறுக்க வொண்ணாத துன்பமிகுதியை காட்டி நிற்குமத்தனை. ''ஹந்யாமஹமிமாம் பாபாம் கைகேயீம் துஷ்ட சாரிணீம்'' என்று பரதாழ்வான் தாயை வதம் செய்து விடுவதாகச் சொன்னது தன்னுடைய அஸஹ்ய வேதனையைக் காட்டுமத்தனை யொழிய வேறில்லையே.

(அயோ 95-24). ''பரதோ வத்ய ஏவ மே...ரபதஸ்ய வதே தோஷம் நாஹம் பச்யாமி ராகவ,'' என்று சித்ர கூடத்தில் பெருமானை நோக்கி இளைய பெருமாள் சீறிச் சொன்னதும் இந்த ரீதியில் தானே பொருளைத் தந்து நிற்கும் *ஹநிஷ்யாமி ஸபாந்தவம்* என்று ஸுக்ரீவ மஹாராஜர்க்கு பெருமான் சொல்லியனுப்பினதும் அக்கருத்தில் தானே. *வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ் ஸஹ* என்று சரணாகதனான விபீஷணாழ்வான் விஷயத்திலே ஸுக்ரீவ மஹாராஜர் சொன்னதும் ஸம்ரம்பாதிசயத்தைக் காட்டுவதில் மட்டுமேயன்றோ விச்ராந்தம். *மயைவைதே நிஹதா: பூர்வமேவ* என்று கீதாசார்யன் சொன்னதும் இங்கு நினைக்கத் தக்கது.

(தொடரும்)

## (7) எவராலும் அளவிட்டு அறியமுடியாத அப்ரமேயன் யார்?

முதற்பரிபாடலில் "**அன்ன மரபின் அனையோய்! நின்னை இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது?**" [அப்படிப்பட்ட பெருஞ்சிறப்புக்களை உடைய பெரியவனே! உன்னை இப்படிப்பட்டவன் என்று உரைப்பது சிற்றறிவாளர்களான எமக்கு எப்படி எளிதாகும்] என்று திருமாலே அளத்தற்கரிய பரம்பொருள் என்று பேசினார். இதையே "**இன்னோர் அனையை இனையையால் என அன்னோர் யாம் இவண் காணாமையின்**" என்று திருமாலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத பரம் பொருள் என்று அறுதியிடுவதன்மூலம் வலியுறுத்தினார். மூன்றாம் பரிபாடலிலும் "**இனைத்து என என் வரம்பு அறியா யாக்கையை**" என்று திருமாலின் சரீரங்களை இவ்வளவு என்று எண்ணமுடியாது என்று கடுவன் இளவெயினனார் காட்டினார். "**நின்னைப் புரை நினைப்பின் நீ அலது உணர்தியோ. முன்னை மரபின் முதுமொழி முதல்வ!**" என்று திருமாலை அறிவது அவன் ஒருவனைத் தவிர வேறு எவர்க்கும் எளிதன்று என்றும் முழங்கினார்.

ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் M.A.B.L.
"ஸ்ரீ வைஷ்ணவஸுதர்சம்" ஆசிரியர்

"**நினக்கு—விரிந்து அகன்ற கேள்வி அனைத்தினும், வலியினும், மனத்தினும், உணர்வினும் எல்லாம் வனப்பு வரம்பு அறியா மரபினோயே**" [அளவற்ற வேதங்கள் அனைத்தினாலும் எத்தனையேனும் பலமுடையவர்களாலும், எவ்வளவு தூய நெஞ்சினாலும், எவ்வளவு அகன்ற அறிவினாலும் உன்னுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், செல்வங்கள் ஆகிய அனைத்தையும் அறியமுடியாது; எல்லையையும் அறிய முடியாது] என்று திருமாலே அளத்தற்கரிய பரம்பொருள்

என்பதைத் தெளிவாக விளக்கினார். "**காணா மரப!**" என்று விளிப்பதன் மூலம் இவன் எவராலும் அளவிட்டு அறிய முடியாத முறைமையினை உடையவன் எனக் காட்டினார். நாலாம் பரிபாடலைத் தொடங்கும் போதே 'உலகியலைக் கடந்த ஞானிகளே திருமாலின் புகழைப் பாடமுடியுமே யொழிய மற்றையோரால் பாட இயலாது' எனக்கூறி, "**அவை நினக்கு இறும்பூது அன்மை நன்கு அறிந்தேம்**" [அப்புகழுரைகளும் உன் இயல்பையே சொல்லுகின்றன வாகையாலே உனக்கு வியத்தற்குரியவையல்ல என்பதை நாம் நன்கு அறிந்தோம்.] என்று இதையே அறுதியிட்டார். '**அளப்பரியவை**' என்று அளத்தற்கரியவனாயிருக்கிறாய் என்றே திருமாலை வர்ணிக்கிறார். புறநானூற்றிலும் "**வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும் புகழ்தல் மாற**" என்று இவ்வுலகில் எவராலும் அளவிடமுடியாத புகழை உடைய பாண்டியனுக்குத் திருமாலை உவமையாகக் காட்டியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. இப்படி அளத்தற்கரிய பெருமையுடையவன் என்று வேறு எந்த தெய்வத்தையும் சங்ககாலத் தமிழர் போற்றவில்லை. இதிலிருந்து திருமாலையே அவர்கள் அளத்தற்கரிய பெருமையுடைய பரம்பொருளாகக் கொண்டனர் என விளங்குகிறது.

## (8) தேவர்களனைவர்க்கும் ஆதிதேவனான தேவாதி தேவன் யார்?

மூன்றாம் பரிபாடலில் "**ஞாலத்து உறையுள் தேவரும் வானத்து நாலு என் தேவரும் நயந்து நிற்பாடுவோர்**" என்று முப்பத்து முக்கோடி தேவர்களும் திருமாலை விரும்பிப் பாடுவார்கள் என்று கூறுவதன் மூலம் அவனே தேவாதி தேவன் என்று கடுவன் இளவெயினனார் அறுதியிட்டார். "**அமரர்க்கு முதல்வன் நீ**"! என்று பாடுவதன் மூலமும் இதை வலியுறுத்தினார். '**உலகாள் மன்னவ!**' என்று விளிப்பதன் மூலமும் இதை விளக்கினார். நாலாம் பரிபாடலில்

**"நின்னில் சிறந்த நிறை கடவுளமை"** (திருமாலாகிற உன்னி டத்தில் சிறந்ததும், நிறைந்ததுமான கடவுள் தன்மை உளது) என்று தேவாதிதேவன் திருமாலே என்று காட்டப் பட்டது. தொல்காப்பியனாரும் நாலு நிலங்களுக்குரிய நாலு தெய்வங்களைப் பேசும்போது மாயோனை முதலில் எடுப்பதன் மூலம் இவனே தேவதேவன் எனக் காட்டினார். பூவை நிலையைக் கூறும்போது **"மன்பெரும் சிறப்பில் தாவா விழுப்புகழ் மாயோன்"** என்று கூறுவதன் மூலம் திருமாலே தேவாதி தேவன் என விளக்கினார். **"தேயா விழுப்புகழ்த் தெய்வம்"** என்று திருமாலைப் பாடுவதன் மூலம் முல்லைக் கலி மூன்றும் பாடலிலும் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டது. புறநானூற்றில் 58-ம் பாடலில் **"பால் நிற உருவின் பனைக் கொடியோனும் நீல் நிற உருவின் நேமியோனும் என்று இரு பெரும் தெய்வமும்"** என்று கிருஷ்ண பலராமர்கள் இரு பெரும் தெய்வங்கள் என்று பாடப்பட்டதும் இதை வலியுறுத்துகிறது. இவ்வண்ணமாக வேறு எந்த தெய் வத்தையும் சங்ககாலச் சான்றோர் தேவாதிதேவனாகப் பாடவில்லை என்பது குறிக்கொள்ளத்தக்கது.

## (9) உயிர்களுக்கெல்லாம் இயற்கை உறவினனா யிருக்கும் பரம்பொருள் யார்?

மூன்றும் பரிபாடலில் **"அமரர்க்கு முதல்வன் நீ அவுணர்க்கும் முதல்வன் நீ"** என்று தேவர்க்கும் அசுரர்க்கும் பொதுவான முதல்வனாயிருப்பவன் திருமால் என்று கூறி விட்டு, **"அதனால்—பகைவர் இவர்; இவர் நட்டோர் என்னும் வகையும் உண்டோ நின் மரபு அறிவோர்க்கே"** (ஆகையால் "இவர்கள் எதிரிகள், இவர்கள் நண்பர்கள் என்னும் பாகு பாடு திருமாலாகிற உன் இயற்கை உறவை அறிந்தவர் களுக்குக் கிடையாது) என்று திருமால் அனைவர்க்கும் இயற்கை உறவினனாகையாலே அதை அறிந்தவர்களுக்கு நண்பர் பகைவர் என்னும் வேற்றுமையில்லை என முழங்கப்

பட்டது. பதின்மூன்றும் பரிபாடலிலும் **"அன்னை என நினைஇ நின் அடி தொழுதனெம்"** என்று திருமால் அனைத்துயிர்களுக்கும் தாய் போன்று இயற்கை உறவை உடையவன் என்று காட்டப்பட்டது. இங்கு 'அன்னை' என்றது— உபநிஷத்தில் சொன்னபடி தந்தை, தமையன், கணவன் முதலான எல்லா உறவுகளுக்கும் உபலக்ஷணமாகும். இப்படி அனைத்துயிர்களுக்கும் எல்லா உறவுகளாயிருக்கையால் ஏற்பட்ட பேரன்பால் இவன் உலகில் உயிர்களை ரக்ஷிப்பதற்காக அவதரிக்கிறான் என்பதை **"எவ்வாயின் உலகத்தும் தோன்றி அவ்வயின் மன்பது மறுக்கத் துன்பம் களைவோன் அன்பு அது மேஎய் இருங்குன்றத்தான்"** என்று பதினைந்தாம் பரிபாடல் பறைசாற்றிற்று. இப்படி உயிர்களோடு எல்லா வகை உறவையும் உடையதாகத் திருமாலைத் தவிர வேறு எந்த தெய்வமும் சங்ககாலத் தமிழரால் கூறப்படவில்லை என்பது குறிக்கொள்ளத் தக்கது.

(தொடரும்)

With best compliment from

**J. M. BAXI & CO**

2/21, NORTH BEACH ROAD
MADRAS - 600 001.

Phone : 20016 (4 lines) Post Bax
Telex : 626 & 416 Cobles :" BXICO"

# அறிமுகத்துக்கு அறிமுகம்

பேராசிரியர் திரு அரங்கராசன், M. A., B. T. அவர்களைப் பற்றி நமது வாசகர்கள் ஏற்கனவே நன்கு அறிவார்கள். நமது பூருவாசாரியர்கள் திவ்யப்ரபந்தத்திற்கு அருளியுள்ள வியாக்கியானங்களில் காணும் பல ஐதிஹ்யங்களை சுவையான முறையில் பல கதைகளாக எழுதியுள்ளார். அவைகளில் சில ஸ்ரீதாசார்யனிலும் வெளிவந்திருக்கின்றன. மதுரைக் கல்லூரியில் தமிழ்த் துறையில் பேராசிரியராக விளங்கும் திரு அரங்கராசன் நம்பிள்ளையின் ஈடுமுப்பத்தாறாயிரப்படி வியாக்யானத்தைப் புதிய கோணத்தில் ஆராய்ந்து, அவ்வாராய்ச்சியை Ph. D பட்டத்திற்காக சமர்ப்பித்துள்ளார். அவ்வாறு ஆராய்ச்சி செய்யும்போது அவ்வியாக்யானத்தில் குறிப்பிடப்பட்ட சில அருமையான பாத்திரங்களைப் பற்றிச் சுவையான முறையில் நமக்குத் தொடர்ந்து அறிமுகப்படுத்தவிருக்கிறார். அறிமுகம் என்ற இப்புதிய பகுதியினை வாசகர்கள் நிச்சயம் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

—ஆசிரியர்

*அறிமுகம் —1*

## தேவகிப் பிராட்டியார்

**அன்று ஆடிப்பிறப்பு.**

திருவரங்கத்திலிருந்து திவ்யதேச யாத்ரையாகப் புறப்பட்ட அடியார்கள் திருக்கோட்டியூரை அடைந்து விட்டனர்.

திருவரங்கம் திருப்பதியே இருப்பாகப் பெற்று வாழ்ந்து வருபவர்கள் அவர்கள். அவர்களுக்குத் திருவனந்தபுரத்து எம்பெருமானை வழிபடும் பேராவல முன்னின்றது. ஸ்வாமி நம்மாழ்வாரைத் தலைவராக ஏற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள்

திருவனந்தபுரத்து நாயகனை அனந்தசாயியைத் திருவடி தொழ வேண்டும்; அப்போதுதான் ஆழ்வாருடைய அபிமானத்திற்குள் ஒதுங்கிக் கொள்ளும் பேறு கிட்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

''படமுடை அரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண
நடமினோ நமர்கள் உள்ளீர் நாம் உமக்கு அறியச்
சொன்னோம்''

என்ற ஆழ்வாருடைய ஆணையே அவர்களைத் திருவனந்தபுரம் யாத்திரையை மேற்கொள்ளச் செய்தது.

---

பேராசிரியர் இரா. அரங்கராஜன் M. A. B. T.

---

திருக்கோட்டியூருக்கு வந்த அவர்களுக்கு அங்கே திருவாடிப்பூர மஹோத்ஸவம் முதன்முறையாகத் தொடங்கப்படுவதைக் காணும் பாக்யம் கிடைக்க இருந்தது! ஆமாம்— ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லப தேவ பாண்டியனே உத்ஸவத்தை தொடங்கி வைக்க வருகிறான்! ஆண்டாள் அரங்கருடன் கூடிக் கலந்த அற்புதத்தை நேரிற்கண்ட பாண்டிய மன்னனுக்கு ஆண்டாளின் அவதார தினமான திருவாடிப் பூரத்தைப் பெரு விழாவாகப் பொலிவுடன் கொண்டாடும் ஆசை பிறந்தது. அவ்விழாவை எங்கு கொண்டாடுவது?— பாண்டியன் ஆலோசித்தான். பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதியின் செந்தமிழ்ப் பாண்டிய நாட்டில் கொண்டாடுவதுதான் பொருத்தமானது ஆனால் எந்த திவ்ய தேசத்தில் அதைத் தொடங்குவது? பாண்டிய தேசத்தின் படைவீடான மதுரை நகரில் கொண்டாடுவதா? ஆண்டாள் அவதரித்த வில்லிபுத்தூரில் கொண்டாடுவதா? சிந்தனையில் மூழ்கிய சீமாறன் இறுதியில் பெரியாழ்வாரை மதுரை மாநகர்க்கு அழைத்து வந்து பெருமைப் படுத்திய தன்னுடைய ஆசாரியர் ராஜபுரோஹிதர் செல்வநம்பியின் திருஅவதார ஸ்தலமான திருக்கோட்டியூரிலேயே கொண்டாடுவது என்று

முடிவு செய்து விட்டான். அதற்குரிய ஏற்பாடுகளை நிறை வேற்றுமாறு செல்வநம்பியையே பிரார்த்தித்துக் கொண்டான்.

பாண்டிய மாமண்டலத்தின் ராஜபுரோஹிதராய் அபிமான துங்கராய் நீதிக்கோர் நிலைக்களமாய் விளங்கிய செல்வநம்பி யின் வருகையை அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டி யரான பெருமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் தான் திருவரங்கத்துத் திருமாலடியார்கள் திருக்கோட்டி யூருக்குள் பிரவேசித்தனர்

அவர்கள் நேரே திருக்கோயிலுக்குள் புகவில்லை. வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமானைப் பாதம் பணி யும் பாங்கினரான அவர்கள் செல்வநம்பியைப் புருஷகாரமாகக் கொள்ள வேணும் என்ற வேட்கையினராய் அவருடைய திரு மாளிகைக்குச் சென்றனர்.

செல்வநம்பி இன்னும் ஊர் திரும்பவில்லை. அவருடைய தேவியார் தேவகிப் பிராட்டியார் அடியார்களை அன்புடன் வர வேற்றார். அவருடைய இன்சொற்கள் அடியார்களைக் குளிர் வித்தன. அடியார்களுக்கு நாடொறும் விருந்தோம்பும் உயர் பண்பினர் தேவகிப் பிராட்டியார். அவர்களை எல்லாம் நீராடி எழுந்தருளுமாறு வேண்டினார். திருமால் அடியாரைப் பூசிக்கும் நோன்பு என்றால் கேட்க வேண்டுமா? அவர்களுக்கு அறுசுவையுடன் திருவமுது படைக்க எண்ணினார் தேவகிப் பிராட்டியார். ஆனால் அன்று அரிசியோ ஒரு மணி கூட இருப்பில் இல்லை. என் செய்வார்?

நல்லவேளை! பரண் மீது குதிர்களில் விதை நெல் சேமிக் கப்பட்டு வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. அடியார் களுக்குப் பயன்படாது ஒரு சேமிப்பும் வேண்டுமா? அவ்வளவு தான்/ விதை நெல் அத்தனையையும் குத்தி அரிசியாக்கி அமுது படைத்து அடியார்களை மகிழ்வித்தார். அவர்களும் அவரை வாழ்த்திச் சென்றனர்.

அதேசமயம், மதுரையிலிருந்து செல்வநம்பிகள் ராஜபரிவாரங்களுடன் திருமாளிகை வாசலில் வந்து சேர்ந்தார். அவரை வரவேற்க நின்ற திரளில் குடியானவர்களும் கூடி நின்றனர். அவர்கள் ஆடிப்பட்டம் தேடி விதைப்பதற்காக விதை நெல் பெற வந்தவர்கள். செல்வ நம்பிகள் அவர்களைக் கண்டதும் நேரே பரண் மீது ஏறி விதை நெல்லை எடுத்து வழங்கத் தேடினார். என்ன அதிசயம்! விதை நெல்லைக் காணவில்லை! பேய் கொண்டதா? பரண் விழுங்கியதா? செல்வநம்பிக்கு அதிர்ச்சியாயிருந்தது. பரணிலிருந்து கீழே இறங்கிய செல்வநம்பி தேவகிப் பிராட்டியாரை அழைத்தார்.

"பிள்ளாய்! நெல் எங்கே?"

"ஸ்வாமி! விதைத்துவிட்டேன்"

"எங்கே விதைத்தாய்?"

"அடியார்கள் திருவயிற்றிலே விதைத்தேன்"

"அப்படியா? அது எங்கே விளையும்?"

"விளைவது பரமபதத்திலே!" இதைக் கேட்டதும் செல்வ நம்பிகளின் திருக்கண்கள் குளமாயின. தம்முடைய தேவியாரை அணைத்து அவர் பாராட்டிய போது

"நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே"

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தை அவருடைய திருவதரங்கள் மெல்ல இசைத்தன!

குறிப்பறிந்து ஒழுகும் நல்மனைவிக்கு இலக்கியமாகத் திகழ்ந்த தேவகிப் பிராட்டியாரின் இப்பெருமை நம்பிள்ளையால் ஈட்டில் பொறித்து வைககப்பட்டிருககிறது. செல்வநம்பியின் வம்சத்தில அவதரித்தவரே திருக்கோட்டியூர் நம்பிகள். திருககோட்டியூர் நமபியின் குமாரத்தியும் தேவகிப் பிராட்டி எனறு பெயர் சூட்டபபட்டாள்; திருத் தமப்பனாரால் எம்பெருமானார் திருவடியில ஆசிரயிககும பேறும் பெற்றாள். ★

# "பார்த்தன்பள்ளி பாடுவாளே"

**காரணப் பெயர் :** த்வாபர யுகத்தில் நடந்த வரலாறு இது. ஒருநாள் பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தில் இருந்தபொழுது தமது மூத்த தமையனுரான தருமரை சந்தித்து உரையாட பார்த்தனுகிய அர்ச்சுனன் அவர்தம் இடத்திற்கு ஏகிருன். அவ்வமயம் தருமர் தமது தேவியரான த்ரௌபதியுடன் ஏகாந்தத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். தங்களுக்குள் அமைத்துக் கொண்ட நியதியை மீறியதன் விளைவாக அர்ச்சுனன் ஓராண்டு காலம் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டியதாயிற்று. தெற்கு நோக்கிப்

---

கு. அ. தேவராஜன்

---

புறப்பட்ட அர்ச்சுனன் ஸ்வேதாரண்யம் எனப்படும் க்ஷேத்திரத்தை அடைந்தான். அவ்விடத்திற்கு அருகில் உள்ளதோர் தடாகத்தில் நீராடி த்யானத்தில் ஆழ்ந்தான். மனக் கண் முன் மாதவன் தோற்றத்தைக் கண்டான். அவன் த்யானம் செய்து எம்பெருமானை சேவித்த திருத்தலமே பிற்காலத்தில் "பார்த்தன்பள்ளி" என்னும் பெயர் பெற்றது. பார்த்தனுகிய அர்ச்சுனன் பரந்தாமனுகிய கண்ணபிரானை தரிசித்துப் பள்ளி இருந்தமையால் பார்த்தன் பள்ளி என்ற பெயர் அவ்வூருக்கு ஏற்பட்டது. பரமனைக் கண்ட களிப்புடன் பார்த்தனும் தீர்த்த யாத்திரையை முடித்து மீண்டும் வடக்கே விடை கொண்டதாக வரலாறு.

**சோழர் காலச் சிறப்பு :** சங்க காலப் புகழ்பெற்ற சோழர்களின் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம். சிலப்பதிகாரம் செப்பும் கண்ணகி உறைந்த எழில் மிகு நகரம் அது.

பூம்புகார் சோழர்களின் மிகப் பெரிய துறைமுகமாகவும் இருந்தது. முதல் நூற்றாண்டில் (I AD) வளம்மிக்க ஆட்சி செய்த கரிகாலன் எழுப்பிய அரண் தோற்றமளிக்கும் பூம்புகாருக்கு ஏழு கல் தூரத்தில் அமைந்துள்ளது பரமனின் வாசஸ்தலமான திருப்பார்த்தன்பள்ளி. பண்டை நாளில் சோழ மன்னர்கள் ஆடிப் பெருக்கில் பொன்னி எனும் காவிரி ஆறு கடலில் சங்கமமாகும் காவிரிப்பூம் பட்டிணத்தில் இந்திர விழா எடுத்து வாழ்ந்தனர். அவ் விழாவில் பார்த்தன்பள்ளி எம்பெருமான் முத்துப் பல்லக்கில் பவனி வர சோழ மன்னர்கள் பரமனின் புகழ் பாடி, அவனருள் பெற்று நீதி தவறாது ஆட்சி செய்தமை சாலச் சிறப்பாகும். இதன் காரணமாகவே இன்றும் பார்த்தன்பள்ளிப் பரந்தாமன் ஆடி அமாவாசை அன்று காவிரிப்பூம்பட்டிணம் எழுந்தருளி, சங்கமத்தில் திருமஞ்சனம் கண்டருளி ஆயிரக்கணக்கான பக்தர்களின் உள்ளங்களை கொள்ளை கொள்கிறார். இதை அடியொற்றியே பொய்கை ஆழ்வாரும் தமது முதல் திருவந்தாதியில்

**"பெயருங் கருங்கடலே நோக்குமாறு**
**ஒண் பூ உயரும் கதிரவனே நோக்கும்—உயிரும்**
**தருமனையே நோக்கும் ஒண் தாமரையாள் கேள்வன்**
**ஒருவனையே நோக்கும் உணர்வு"**

என்று அருளிச் செய்தார்.

**திருநாமங்கள் :** திருப்பார்த்தன்பள்ளி எம்பெருமான் திருநாமம் தாமரையாள் கேள்வன் என்பதே. தாயார் தாமரை நாயகி நின்ற திருக்கோலம். மேற்கு நோக்கிய திருமுக மண்டலம், உத்ஸவர் பார்த்த சாரதி என்றும், தேவ தேவன் என்றும் அழைக்கப்படுகிறார். அருகில் கோலவில்லி இராமனும் காட்சி தருகிறார். அர்ச்சுனன் வடக்கு நோக்கி தவம் செய்யும் கோலத்தில் கை கூப்பி பரமனை வழிபட்டு நிற்கிறான். கட்க புஷ்கரணியில் நீராடினால் கடம் கடமான பாவங்கள் போகும் என்பது

மூதோர் வாக்கு. தைப்பூசம் எம்பொருமானின் திருவவதார விழாவாக சிறப்பு பெற்றது.

**திருமங்கை மன்னன் ஈடுபாடு:** உகந்தருளின நிலங்களில் பெரும்பான்மை உலகறியச் செய்தவர் நம் கலியன். அவர் மிகவும் ஈடுபட்ட திவ்ய தேசங்கள் திருநாங்கூர் திருப்பதிகள் ஆகும். வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களை ஈர்க்கும் மங்களாசாஸன உத்ஸவமும், திருநாங்கூர் பதினொரு கருடசேவையும் ஆழ்வாருக்காகவே ஏற்பட்ட ஒரு மாபெரும் விழாவாகும். தை மாதம் அமாவாசை அன்று தம் இருப்பிடமான திருநகரியை மூன்று நாட்கள் மறந்து நாலாயிரவர் ஏத்தும் நாங்கூர் எழுந்தருளி, ''தாமுகந்த ஊரெல்லாம் தன்தாள் பாடி'' என்ற தமது திவ்ய சங்கல்பத்தை அடியார்களுடன் நிறைவேற்றும் ஆழ்வார் கலியன் ஒருவரே.

கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப் பெருமான் ஏத்தும் பார்த்தன்பள்ளி பெருமை வாய்ந்த திருத்தலம். எம்பெருமானை தாயான தன்மையில் புகழ்ந்து பரகால நாயகியின் மனோரதங்களை பூர்த்தி செய்விக்குமாறு இறைஞ்சுதலே உள்ளக் கருத்து. பதிகம் தொடங்கும் போதே க்ருஷ்ணாவதார வைபவங்களை பரக்க வெளியிட்டு முடிவில் கண்ணனையே தன் மகள் பரவுவதாக அருளிச் செய்வதன் மூலம் பார்த்தன் உகந்த பள்ளியின் பெருமை உலகிற்கு வெளிப்படுகிறது. இத்தலத்திற்கு அருளிச் செய்த பலஸ்ருதியான பாசுரம் தேனும், பாலும், கன்னலும் அமுதுமானது. சிறிதே நினைப்போம்:

**''பாருள் நல்லமறையோர் நாங்கை பார்த்தன் பள்ளிச் செங்கண்மாலை**
**வார்கொள் நல்ல முலை மடவாள் பாடலைத் தாய்மொழிந்த மாற்றம்**
**கூர்கொள் நல்லவேற் கலியன் கூறுதமிழ் பத்தும்வல்லார்**
**ஏர்கொள் நல்ல வைகுந்தத்துள் இன்பநாளும் எய்துவாரே''**

நான்கு அடிகளிலும் "நல்ல" என்ற பதப்ரயோகத்தை ஆழ்வார் கையாண்டுள்ளது, இப்பதிகத்திற்கும், இத்தலத்திற்கும் மட்டுமே உள்ள தனிச் சிறப்பாகும்.

**திருப்பணி வேண்டுகோள் :** பழமையும், புனிதமும் மிக்க திருப்பார்த்தன்பள்ளி பலவாண்டுகளாக கவனிப்பாரற்று மிகவும் பழுதடைந்திருந்தது. இத்தலத்திற்கு 1977ல் எழுந்தருளிய மஹாபுருஷரான ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸத்ய ஸங்கல்பரான ஸ்ரீமந்நாராயண இராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருக்கோயிலை உடனடியாக பழுது பார்க்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றினர். அதற்காக ஒரு கமிட்டியை அமைத்து திருப்பணியை விரைவில் நடத்த வழி செய்தார். ஸ்ரீ ஜீயர் ஸ்வாமியின் அருளாசி பெற்ற கமிட்டியார் ரூபாய் ஒன்றரை லக்ஷம் செலவில் திருப்பணியை துவக்கி தற்போது முடிக்கும் அவசரத்தில் உள்ளனர். வருகிற ஆவணி மாதத்தில் திருமங்கை மன்னன் முன்னிலையில் நடைபெறவிருக்கும் மஹாசம்ப்ரோக்ஷண வைபவத்தில் உலகிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஆஸ்திக பெருமக்களும் கலந்து கொண்டு ஆழ்வார், எம்பெருமான் இருவரின் திவ்ய கடாக்ஷத்திற்கு இலக்காக வேண்டும்.

திருப்பணிக்கும், மஹாசம்ப்ரோக்ஷணத்திற்கும் நன்கொடை வழங்குவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்புமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்:

**ஸ்ரீமான் V. சேஷாத்ரி பட்டாசாரியர்**
செயலாளர் & பொருளார்
**திரு. பார்த்தசாரதி**
**கோலவில்லி இராமன் திருப்பணி கமிட்டி,**
**திருப் பார்த்தன் பள்ளி,**
**இராதாநல்லூர் போஸ்டு**
**திருவெண்காடு, சீர்காழி**




## 21. உடையவரின் பிடிவாதம்

வில்லிதாஸனின் வலிய தோள்களை நீராட்டத்துக்குப் பின்பு பற்றித் தம்மை உடையவர் அனுசாரப் படுத்திக் கொண்ட நிகழ்ச்சியாக ஆண்டான் நினைத்தார். நீராட்டம் முடிந்ததும் தாம் கரையின் அருகாமையில் இல்லாத காரணத்தால், தள்ளாமையின் காரணமாக எம்பெருமானார் வில்லிதாசனைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு கட்டினார். மடத்துக்குச் சென்றதும் உடையவர் அனுசாரத்தைக் கண்டு வியப்படைந்த மற்ற வைதிகர் களுக்கும் ஆண்டானே தமது சமாதானத்தைச் சொல்லி "இனி இது ஏற்படாது" என்று உறுதி கூறினார்.

இந்த உறுதிகூட மற்றவர்களுக்கு சமாதானத்தை அளிக்கவில்லை அப்படி உடையவர் அறியாமல் செய்திருந் தால் மடத்துக்கு வந்ததும் மந்திரஸ்நானமாவது செய்தி ருக்கலாமே என்று பேசிக் கொண்டார்கள். "அதுவும் வேண்டாம். 'ஓம் நமோ நாராயணாய' என்று சொல்லித் தலையில் புரோக்ஷித்துக் கொண்டிருக்கலாமே என்று ஓரிருவர் முணு முணுத்தனர். அந்த முணு முணுப்பு அன்றுடன் நிற்கவில்லை. மறுநாள் அதிகமாயிற்று. அதற் கடுத்த நாள் அதைப்பற்றி மடத்துப் பிராமணர்கள் பகிரங்கமாகவே பேசத்தொடங்கினார்கள். உடையவர் பிரதிதினம் பின்னை உறங்கா வில்லிதாஸனின் தோள்களைப் பற்றிகொண்டே மடத்துக்கு வந்து கொண்டிருந்தார். இதனால் ஆண்டானும் மனம் நொந்தாலும், அது சரியாகத் தானிருக்கும் என்ற எண்ணத்தில் பேசாமலிருந்து விட்டார்.

இப்படிப் பத்து நாட்கள் உடையவரின் 'அனுசாரம்' தொடரவே ஆண்டானை வைதிகர்கள் நேரிடையாகவே கேட்கத் துவங்கினார்கள். "ஸ்வாமி! தேவரீர முதல்நாள்

சாதித்தபடி உடையவர் தெரியாமல் ஏதும் செய்வதாகத் தெரியவில்லையே'' என்றார் ஒரு ஸ்வாமி.

''வில்லிதாஸன் தோள் வலிமையுள்ளதாகையால் எம்பெருமானாருக்கு அது உகப்பாக இருக்கிறதோ என்னவோ'' என்றார் இன்னொரு ஸ்வாமி.

''இருந்தாலும் இந்த அனாசாரத்தை நாங்கள் சகிக்க முடியாது'' என்றார் மற்றொரு ஸ்வாமி.

''வில்லிதாஸனைத் தொட்ட நீட்டுடனேயே எம்பெருமானார் அனுஷ்டானங்களைச் செய்கிறார். காலட்சேபமும் அத்துடனே நடக்கிறது'' என்றார் இன்னுமொருவர்.

இவற்றைக் கேட்ட ஆண்டான் மனம் நொந்தார். ''அடியேனை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?'' என்று விசாரித்தார்.

''ஸ்வாமியிடம் அடியோங்கள் அபிப்ராயத்தை எடுத்துச் சொல்ல வேணும்'' என்று ஸ்வாமிகளில் வயோதிகராயிருந்த ஒருவர் தெரிவித்தார்.

ஆண்டான் இதற்கு ஒத்துக் கொண்டார். அன்றிரவு எம்பெருமானாருடன் ஏகாந்தத்தில் இருந்தபோது இது விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார் ''மடத்தில் பேச்சு பலவிதமாக அடிபடுகிறது'' என்று ஆண்டான் துவங்கினார்.

''என்ன பேச்சு அடிபடுகிறது?'' எம்பெருமானார் சயனித்த வண்ணம் வினவினார்.

''நீராட்டத்துக்குப் பிறகு வில்லிதாஸன் தோளைப் பிடித்து நடந்து வருவது பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லை...''

''யாரது பிராமணர்கள்? நம் மடத்தவர்களா?''

''ஆம்''

''ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியைச் சேர்ந்தவர்களா?'' எம்பெருமானார் கேள்வியில் வியப்பு தொனித்தது.

''ஆமாம்''

''ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் இருந்து இடமேது? எம்பெருமான் ஸ்ரீரங்கநாதனே தமக்கருகில் திருப்பாணாழ்வாரை நிறுத்திக் கொண்டிருக்கிறானே!''

''அவன் எம்பெருமான்......''

''அடியேனையும் அப்படித்தானே அழைக்கிறீர்கள்?'' என்று கேட்ட எம்பெருமானார் உதடுகளில் புன்னகை கொண்டார் ஸ்வாமிகளின் மனக்குறையை கூடிய விரைவில் தீர்ப்போம் என்றும் கூறினார்.

அந்த உரையாடல் அன்றுடன் முடிந்தது. எம்பெருமானார் அளித்த உறுதியால் முணுமுணுப்புகள் நின்றன. ஆனால் உடையவர் வில்லிதாசனைப் பிடித்துக்கொண்டு வருவதை நிறுத்தவில்லை. நாளுக்கு நாள் அவர் பிடிவாதம் அதிகமாவதைக் கண்ட பிராமணர்களின் கொதிப்பு அதிகமாயிற்று. ஆகவே ஒரு நாள் நீராடித் தங்கள் வேஷ்டிகளை மடத்து வாசலில் கட்டிய வைதிகர்கள் உடையவர் தூரத்தில் வில்லிதாசன் தோளில் கையை ஊன்றிக்கொண்டு வருவதைப் பார்த்ததும் மடத்துக்குள் சென்று விட்டனர்.

அவர்கள் நடையின் வேகத்தை தூரத்திலிருந்து பார்த்த உடையவர் மடத்துப் படிகளில் ஏறியதும் வில்லிதாசன் தோளை விட்டார். ''வில்லி'' என்று அன்பாகஅழைத்தார்

''ஸ்வாமீ!'' வில்லிதாஸன் வாயைப் பொத்தி நின்றான்.

''இந்த வேஷ்டிகள் மடத்துவழியை மறைக்கின்றன.''

''ஆம் ஸ்வாமீ''

''ஒவ்வொரு வேஷ்டியையும் ஒரு சாண் கிழித்து விட்டால் வழி மறையாது''

''ஆம் ஸ்வாமி''

''அப்படியே செய்துவிடு'' என்று ஆக்ஞாபித்த எம்பெருமானார் உள்ளே சென்று விட்டார்.

ஆசார்யர் வார்த்தைக்கு மறுவார்த்தை ஒன்றும் பேசியறியாத வில்லிதாஸன், வேஷ்டியைக் கிழிக்கும் கைங்கர்யத்தில் மும்முரமாக இறங்கினான்.

(தொடரும்)

# எம்பெருமானும் எம்பெருமானாரும்

தமிழ் நாட்டின் மண்ணிலே, முதன் முதலாகத் திருமந்திரம் அசல் நரன் காதிலே ஓதப்பட்டது! தம்மை மணக்க விரும்பினால், ஓராண்டுக் காலம் பாகவத ததியாராதனை புரியவேண்டுமென்ற நிபந்தனையை நிறைவேற்றப் பொருள் இல்லாமல் வழிப் பறி நடத்தி நித்திய ததியாராதனையைப் புரிந்து வந்தார் குறையலூர் வாழ் வேந்தனான திருமங்கை ஆழ்வாரும். இவரை ஆட்கொள்ள வேண்டுமெனத் திருவுள்ளம் பற்றிய திரு ஆலி திரு நகரியிலே எழுந்தருளியுள்ள வயலாலி மணவாளப் பெருமாள், பிராட்டி சகிதமாகத் திருமணங் கொல்லைக்கு எழுந்தருளினான். அவர் ஆபரணங்களை அபகரித்துக்கொண்ட

நா. வேணுகோபால் நாயகர், B. A., B. L.,

ஆலி நாடாரும் திருமங்கை ஆழ்வாரும் அவைகளை மூட்டையாய்க் கட்டிக் கீழே வைத்ததை எடுக்க முடியாமற் போகவும், 'என்ன மந்திரம் செய்தீர்!' என வாளை உருவிக் கேட்கவும், மாயோனும் திருமங்கையாழ்வாரைத் தம் வலது திருச் செவியை தாழ்த்தச் சொல்லி 'ஓம் நமோ நாராயணாய' என்னும் பெரிய திருமந்திரத்தை உபதேசித் தருளினான். இங்ஙனம் மாயோனை வாள் வலியால் மந்திரங் கொண்டார் மங்கையர் கோனும்!

எம்பெருமானிடம் திருமந்திரத்தைச் சேவித்த திருமங்கை மன்னன் அதன் உட்பொருளை ஆராய்ந்தார். எம்பெருமான் அன்றி வேறு ஒருவருக்கும் உரியேன் அல்லேன் என்ற திருமந்திர அர்த்தமான அநந்யார்க சேஷத்துவத்தை உணர்ந்தார்.

"மடையார் நீலம் மல்கும் வயல் சூழ்
கண்ணபுரம் ஒன்று
உடையானுக்கு அடியேன் ஒருவர்க்கு
உரியேனோ"

இதுவே இறைவனுக்கு அடிமைப் பட்டிருத்தல். அவனுக்கே தொண்டு செய்தல், அதாவது பகவத் சேஷத்துவம்.

திருமந்திரத்தின் உட்பொருள் இறைவனுக்கே அடிமைப் பட்டிருத்தலாகிய பகவத் சேஷத்துவம் என்று மேல் எழுந்த வாரியாகக் காணப்படினும், பக்தர்கட்கு அடிமைப் பட்டு அவர்கட்குத் தொண்டு செய்தலே அதாவது பாகவத சேஷத்துவமே திருமந்திரத்தின் மிக உட்பொருள் என்பதை மேலும் தெரிந்து கொண்டதையும் வெளியிடுகிறார் திருமங்கை ஆழ்வார்.

"மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு
உற்றிலேன்! உற்றதும் உன் அடியார்க்கு அடிமை!
மற்றெல்லாம் பேசிலும் நின் திருஎட்டெழுத்தும்
கற்று நான், கண்ணபுரத்துறையம் மானே!

திருமந்திரத்தில், அனேக உட்பொருள்கள் அடங்கியிருப்பினும், அவற்றுள் தாம் சிறந்ததாகத் தெரிந்து கொண்ட மிக்க, நுண்ணிய உட்பொருள் பக்தர்கட்கு அடிமைப்பட்டு, அவர்களுக்குத் தொண்டு புரியும் பாகவத சேஷத்துவமே என வெளியிட்டருளுகிறார் திருமங்கை ஆழ்வார்.

இவ்விதமாகத் திருமந்திரத்தின் உட்பொருளை ஆழ்வார்கள் வித்தாகக் காட்டியதை, இவர்களுக்குப் பின் வந்த ஆசார்யர்கள் தங்களுடைய மிக உயர்ந்த வியாக்கியான

உரைகளால் பெரும் விருட்சங்களாக்கியதை குரு-சீடன், ஆசான் சீடன் என்ற வழிமுறையிலே பக்குவம் அடைந்த நிலையினைச் சோதித்துப் போதித்துப் பாதுகாத்து வந்தனர். (இதற்கு ஓராண் வழி என்று பெயர்) பரவலாக எல்லோருக்கும் இயம்பவில்லை. இந்த நிலைமையை ஸ்ரீ எதிராசர் மாற்றி, வைணவத்தால் வையமெல்லாம் பயன் பெற வேண்டும் என்ற பெருநோக்குடன், உயர்ந்த ஞான நோக்குடைய ஆசாரியப் பெருமக்களை, அவனியிலே, ஆசை உடையவர்கட்கெல்லாம் கட்டுப்பாடுகள் இல்லாமல் உபதேசிக்க வேண்டுமென்று நியமித்தருளினார். அதாவது முன்பு இருந்த வரம்பை அறுத்துப் போட்டார்.

ஸ்ரீ மணவாள மாமுனிகள் என்னும் ஸ்ரீ வைணவ ஆசார்யர், தாம் இயற்றிய 'உபதேச ரத்தினமாலையிலே, எதிராசர் தமது இன்னருளினாலே உலகு உய்யச் செய்த உதவியைப் பாராட்டுகிறார்.

**ஓர் ஆண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்,**
**ஏரார் எதிராசர் இன்னருளால்—பாருலகில்**
**ஆசை உடையோர்க்கு எல்லாம் ஆரியர்காள் கூறும்' என்று**
**பேசி வரம்பறுத்தார் பின்!**

கருணைக் கடலான எம்பெருமான் திருமந்திரத்தை-வதரியாச்சிரமத்தில் தன்னையே நர நாராயணனுக்கு கொண்டும், திருவாலி—திருமணங் கொல்லையில் திருமங்கை ஆழ்வாருக்கும் திருமந்திரத்தை—ஒருவருக்கு ஒருவர் உபதேசிப்பது—என்ற முறையை ஏற்படுத்தினான்.

கருணைப் பெருங்கடலான எம்பெருமானோ திருமந்திரத்தையும், அதன் உட்பொருளையும்கூட ஆசையுடையோர்கள் திரள் திரளாகத் திரண்டு வரினும், கூறுங்கள் என்று நியமித்தார். ஸ்ரீ இராமானுசர் அவதரித்தருளிய

ஸ்ரீ பெரும்பூதூரிலே ஆண்டுப் பெருவிழா சமயம் ஆதிசேட —வாகன சேவையின் போது, திருமந்திரார்த்தத்தை அவர் முன் சேவிப்பார்கள். ஆதிசேடனின் அவதாரமான எதிராஜரே பரம கருணையுடன் உலகோர்க்கு திருமந்தி ரார்த்தத்தை உபதேசித்தருள்கிறாராம்!

எம்பெருமான் திருமந்திரார்த்தத்தைப் பர, வியூக அந்தர்யாமித்துவ, அவதார நிலைகளுக்குப் பிறகு கடைசியாக ஏற்பட்ட அர்ச்சை (வணங்கப்படுவதற்காக உருவ வடிவு கொள்ளும்) நிலையிலே வெளியிட்டான். அவ்வளவு கால தாமதமாயிற்று எம்பெருமானுக்கு! எம்பெருமானாரோ, நொடி நேரமும் தாமதிக்காமல் திருமந்திரார்த்தத்தை வெளியிட்டருளி, தமது ஆசார்யரான திருக்கோட்டியூர் நம்பிகளால் **'எம்பெருமானார்!'** என்ற கீர்த்திக் கிரீடம் சூட்டப்பட்டார்;

பூலோக வைகுண்டமான, திருவரங்கம் பெரிய கோயிலிலே எழுந்தருளியுள்ள நம்பெருமாளாகிய அரங்கத்தம்மானும், எம்பெருமானார் என்ற விருதை ஆமோதித்து, அவருடைய பரந்த கருணையை, கைங்கர்யத்தைப் பாராட்டி, ஸ்ரீ வைணவ மதத்திற்கே **''எம்பெருமானார் தரிசனம்!''** என்று திருப்பெயர் சூட்டி மகிழ்ந்தார்! தரிசனம் என்றால் உண்மையை வெளியிடும் மதம் எனப்பெயர். உடையவர் ஸ்ரீ வைணவ தரிசனத்தை மகோன்னதமாகவும் பரட்சிகரமாகவும் பரவச்செய்ததை, உலகோர் உணர்வதற்காக, நன்றியறிதலுடன் இப்படிப் பெயரிட்டருளினும் பொன்னரங்கனும்! மணவாள மாமுனிகள் உபதேச ரத்தின மாலையிலே இதை வெளியிட்டு உபகரிக்கின்றார்!

**''எம்பெருமானார் தரிசனம்!'' என்றே இதற்கு**
**நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்! — அம்புவியோர்**
**இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த**
**அந்தச் செயல் அறிக்கைக்கா!** ★

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr V. V ராமாநுஜம்

"வேதத்தைவிட உயர்ந்த பிரமாணம் இல்லை. கேசவனை விட மேலான தெய்வமில்லை. இது முக்காலும் ஸத்யம் என்று கையை உயர்த்திச் சொல்லுவேன்" இது ரிஷிச்ரேஷ்டரான வேத வியாசரின் திருவாக்கு. **கேசவன்** ஜகத்காரணனான நாராயணனே. "**க** என்ற பிரமனும், **ஈசன்** என்ற நானும் உமதிடமிருந்து உண்டானபடியால் உமக்குக் கேசவன் என்று திருநாமமாயிற்று" என்று பரமசிவன் எம்பெருமானிடம் விண்ணப்பித்ததாக ஹரி வம்சம் கூறும். மேலான பிரமாணம் என்று யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வேதங்களிலுள்ள வாக்கியங்களைக் கொண்டு, "நாராயணனே ஸகலஜகத்காரணன்; பரம் பொருள்; மோக்ஷப்ரதன்: ஜகத்தில் காணும் எல்லாப் பொருள்களிலும் ஆத்மாவாக இருந்து காப்பவன்" என்று காட்டி வைஷ்ணவமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே பரமவைதிகமானது என்று முன் கட்டுரைகளில் மூதலித்தோம்.

இனி நமக்கு மிகவும் ஆப்தர்களான நமது ஆழ்வார்களின் திருவாக்கினால் மூதலிப்போம். திருமாலடியார்களில் முதல்வர்களான ஆழ்வார்கள் அப்பரமபுருஷனால் மயர்வு அற (அஜ்ஞானம் அற்றுப்போம்படி) மதிநலம் (விசேஷ ஞான பக்திகளை) அருளப்பெற்றவர்கள் ஆதலால் இவர்கள் வாக்கு ஸத்யமாயிருக்கும். இவர்கள் நமக்கு அருளியுள்ள தமிழ்ப் பாசுரங்கள் இவர்களின் நெஞ்சில் ஓடும் பகவதநுபவத்தில் தோய்ந்த ஈரச்சொற்களால் ஆயினும், எம்பெருமான் இவர்கள் மூலம் வெளிப்படுத்த தமிழ் மறைகளே ஆகும். *என் சொல்லால் யான்சொன்ன இன்கவியென் பித்து தன் சொல்லால் என் முன் சொல்லும் முதல்வன்* என்றும், *என் நாமுதல் வந்து புகுந்து நல்லின்கவி சொன்ன வாய்முதலப்பன்* என்றும் நம்மாழ்வார் பகவானைப்

பேசுகை காண்க. உபய வேதாந்தங்களும் நமது ஸம்பிரதாயத்திற்கு இருகண்கள். தமிழ் மறைகளை வலதுகண் என்னலாம். ஆழ்வார்கள் மூலமாய் எம்பெருமானுல் வெளியிடப்பட்ட இவை நமக்கு பரம்பரையாக உபதேசமடியாக வரும் சீரிய அர்த்தங்கள் ஆகையால் வேதங்களை யொத்த ப்ரமாண பலமுடையவை என்று நம் பெரியோர் துணிவு.

ஆழ்வார்கள் பதின்மரும் பேசிற்றே பேசும் ஏககண்டர்கள் என்று கொண்டாடப்படுகையால், பலமுகமாகப் பேசினுலும் இவர்களின் பொய்யிலாத வாக்கு கருத்து வேற்றுமையின்றி ஒரேபடியாயிருக்கும். இவர்களுள் முதல்வராகக் கொண்டாடப்படும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு தமிழ்ப்பிரபந்தங்களுள் தனிப்பெருமை உண்டு. வேதாந்தங்களில் பேசப்பட்ட சீரிய பொருள்களை தெள்ளத் தெளிய நாமறியும்படி, இவைகொண்டு தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றேமே* என்கிறபடியே காட்டித் தருகிறுர்.

*உயர்வற உயர்நலமுடையவன்; அயர்வறுமமரர்கள் அதிபதி; பொருள் முழுவதுமாய் அவையவை தொறும் உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்; சுடர்மிகு சுருதியுள் உளன்; விண்முதல் முழுவதும் வரன் முதலாய் அவை முழுதும் உண்ட பரபரன்; எண்பெருக்கந்நலத்து ஒண்பொருள் ஈறில வண்புகழ் நாரணன்; மலர்மகள் விரும்பும் நம் அரும்பெறலடிகள்; எளிவருமியல்வினன்* என்று எம்பெருமானின் உண்மையான ஸ்வரூப ஸ்வபாவங்களை யுணர்த்தி,* அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே* என்று தன் நெஞ்சுக்குச் சொல்லும் முகமாய் நமக்குச் சொல்லி, *நீர்நுமது என்றிவை வேர்முதல் மாய்த்து, இறைசேர்மின்; உயிர்க்கு அதன் நேர் நிறை இல்லை; வண்புகழ் நாரணன் திண்கழல் சேர்மின்* என்று நேராகவும் உபதேசம் பண்ணுகிறுர் திருவாய்மொழி தொடங்கும் திருப்பதிகங்களில்.

இங்கு பேசப்படும் பரமபுருஷனை எம்பெருமான், தன்னிலும் உயர்த்தி இல்லாதபடி மேலான கல்யாண குணங்களையுடையவன்; முற்றும் ஞானம் மலரப்பெற்ற விண்ணவர்களுக்கு ஸ்வாமி; இந்த ஜகத்தில் உள்ள பதார்த்தங்கள் யாவற்றையும் தன்னிலிருந்து உண்டாக்கி, அவைகளிலெல்லாம் சரீரத்தில் ஆத்மா போல் மறைந்து உள்ளிலும் வெளியிலும் வியாபித்து உள்ளவன்; தேசு பொலிந்த வேதங்களில் உறைபவன் (இடமான அந்தப் பிரமாணத்தால் கிடைப்பவன்). எல்லாவற்றிற்கும் சிறந்த காரணமாக இருந்து (அவற்றைப் படைத்து) பிரளயகாலத்தில் அவை யாவற்றையும் (உண்டு) தன்னுள் வைத்து ரக்ஷிக்கும் பராத்பரன், பரந்த ஞானத்திற்கு இருப்பிடமாகவும், அறிபவனாகவும் உள்ள சிறந்த பொருளான அநந்தமான ஆத்மவர்க்கத்தையும், எண்ணிறந்த கல்யாண குணங்களையும் தனக்கு இயல்பாகப் பிரகாரமாயுடைய ஸர்வஸ்வாமி. இதனால் நாராயணசப்த வாச்யன். அலர் மேல் மங்கையான பெரிய பிராட்டியார் மிகவும் விரும்பும் அருமையான தத்துவம் (ச்ரிய:பதியான ஸ்ரீமான்); இவ்வளவு பெருமைகள் வாய்ந்த ஒப்பற்றவனாயினும் இயல்பாகவே மிகவும் எளியவன். இப்படிப்பட்ட பரமபுருஷனின் பிறவித்துயரை அறுத்துத்தரும் சுடர்மிகு திருவடிகளை (நாம் வந்தடைந்தால் தான்துயர் அறும் சேவடி என்னவுமாம்) அன்புடன் தொழுவாயாக. நான், எனது என்னும் எண்ணங்களை (ஆழ்வார் நான் எனல் அஞ்சி தீர், நமது என்கிறார்) அடியோடு அகற்றி இறைவனை அடையப் பாருங்கள். இதையொத்த சீரிய வழி வேறு ஒன்றுமில்லை. வகுத்த ஸ்வாமியான திருநாராயணனை அண்டினவரை ஒருகாலும் விட்டுக்கொடாத திண்மை வாய்ந்த திருவடிகளைப்பற்றி உய்யும் வழி தேடுங்கள்.

(தொடரும்)

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 11. இருவகைக் கள்வர்

கள்வர் தலைவன் வாளை உருவுவதைக் கண்டு வெகுளாது அவன் முன்னால் சென்றார் பிள்ளை உலகாசிரியர்.

''அப்பா! வாளை உருவுகிறாயே! வாளுக்கு நாம் எதிர் வாள் கொண்டு வந்தோமில்லையே! நீ ஒரு தீரன் என்று அல்லவா நினைத்திருந்தோம். வாயால் பேச வேண்டியதை வாளால் பேசுகிறாயே!'' என்று கூறினார் அவர்.

கள்வர் தலைவன் அவரை அரைக் கோபத்தோடும் அரை வியப் போடும் பார்த்தான்.

அவனது சீற்றத்தைச் சிறிதும் பொருட் படுத்தாது அவன் முன்னால் உரிமையுடன் நடந்து சென்றார் உலகாசிரியர்.

கள்வர் தலைவன் அவரை அலட்சியத்துடன் பார்த்தான். ஆனால் உலகாசிரியரின் கண் மலர்களில் கவிந்த ஒரு அருள் ஒளி அதனைச் சிறிதே தடுமாறச் செய்தது.

''நீங்கள் யார்? எங்கே போகிறீர்கள்? யாருக்கு இந்தக் கப்பம் எடுத்துச் செல்கிறீர்கள்?'' என்று கேட்டான் தலைவன் சீற்றத்துடன்.

''அப்பா! பூ உலக வைகுந்தம் என்று கூறப்படும் திருவரங்கத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையோ? பரத கண்டம் முழுவதும் பிரசித்தமாயிற்றே! இந்த கண்டத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் அரசர்களும், பிரதானிகளும், பரிசனங்களும், பக்தர்களும் தினந்தோறும் புனித யாத்திரையாக வந்து சேவிக்கும் தலமல்லவா திருவரங்கம்! அந்த அரங்க நகரில் குடி கொண்டிருக்கும் திருவரங்கனின் பரிவாரங்கள் நாங்கள்! இவை எல்லாம் அரங்கனது சொத்துக்கள்!'' என்றார் உலகாசிரியர்.

கள்வர் தலைவன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

''திருவரங்கனை அறிவோம் ஐயா! அவருடைய சொத்துக்கள் இந்தக் காட்டுக்குள்ளே வர வேண்டிய அவசியம் என்ன? எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்களா? அரங்கனது சொத்துக்களை நீங்களே அபகரித்துக் கொண்டு போகிறீர்களா! நேர்மையாக எடுத்துச் செல்வதென்றால் சாலை வழியாகப் போயிருக்கலாமே!'' என்றான் அவன்.

''அபசாரம்! அபசாரம்'' என்று கூறிய உலகாசிரியர் ''அப்பா, நாட்டில் தூர தேசப் படைகள் வந்திருப்பது தெரியாதா? அவர்கள் அரங்க நகரைப் பாழ் படுத்தி விட்டார்களே! இது தெரியாதா உனக்கு? இது காரணம் பற்றியே திருவரங்கன் காட்டுக்குள் பிரவேசித்திருக்கிறார். நாட்டில்தான் பயம் புகுந்திருக்கிறது என்றால் காட்டுக் குள்ளும் இந்த கதி அவருக்கு ஏற்படலாமா? என்றார் அவர்.

''ஐயா! நீங்கள் என்ன கூறுகிறீர்கள்? திருவரங்கன் இந்தக் காட்டுக்குள் வந்திருக்கிறாரா?'' என்றான் பதட்டத்துடன்.

''ஆமாம் அப்பா! இந்தா உன் கண் முன்னாலேயே இருக்கிறார்!'' என்று கூறி பரிசனங்களுக்கு சமிக்ஞை

காட்டவே, திருச்சின்னங்களை உடனே ஊதிக் கொண்டு எழுந்த பரிவாரங்கள், பல்லக்கை எழுந்தருள வைத்துக் கொண்டு உலகாசிரியர் முன் வந்தார்கள்.

''அப்பா! ஆயிரமாயிரம் அரசர்களும், அடியார்களும் அரங்கன் இருக்கும் இடம் தேடி வருவார்கள். அப்படி வந்தாலும் குறித்த வேளை தவிர மற்ற நேரங்களில் அவரைக் காண முடியாது. ஆனால் இங்கே, நீ செய்த பூர்வ புண்ணியத்தால், இந்தக் காட்டுக்குள் திருவரங்கன் எழுந் தருளி, நீ இருக்கும் இடத்தையே தேடி வந்து உனக்கு சேவை சாதிக்கிறார் பார்!'' என்று கூறி, திருப் பல்லக்கின் திரையை நீக்கி விட்டார் உலகாசிரியர்.

அப்போது கற்பூரத்தை ஒருவர் ஏற்றிக் காண்பிக்க, உள்ளே திருவரங்கனின் திருப் பொலிவு பெற்ற திவ்விய உருவம் ஒரு சுடர் விடும் புன்னகையோடு விகசித்தது.

அந்தத் திருகாட்சியைச் சில கணங்கள் மெய் மறந்து பார்த்திருந்த கள்வர் தலைவனின் கண்களிலே நீர் சுரந்தது. அவன் கைகள் தாமாக வாளைக் கீழே நழுவவிட்டு அஞ்சலி யாக மேலே குவிந்து விட்டன. ''ரங்கா! ரங்கா!'' என்று கூவிக் கைகளைத் தூக்கி, கீழே விழுந்து வணங்கிய தலைவன், ''சுவாமி! பெரிய பாபம் செய்வதாக இருந்தோம்! எங்களைக் காப்பாற்றினீர்கள்! பெருமானுக்கு நேர்ந்தவை களைக் கேட்டு மனம் வருந்துகிறோம். எங்கள் எல்லை வரை பெருமானுக்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாத விதம் காக்கிறோம்'' என்று கூறினான்.

பிறகு, பெருமானுக்கு அன்றைய தின நைவேத்தியங் களுக்காகப் பொருட்களைக் கொணர்ந்து காணிக்கையாகக் கொடுத்ததும் அன்றி, ஊர்வலத்தார்க்கு வேண்டிய வசதி களை எல்லாம் அவன் செய்து கொடுத்தான்.

கிரமப் பரிகாரம் செய்து கொண்ட ஊர்வலம் மீண்டும் புறப்பட்ட போது, கள்வர் தலைவனும் அவனது ஆட்களும் பய பக்தியோடே இருவரங்கனைத் தொடர்ந்து வந்து, அவர்களது எல்லை வந்ததும் மிக உருக்கமாக விடை பெற்றுக் கொண்டு, ''ஐயாக்களே! போகிற வழியில் பல்வேறு கள்ளர் பற்றுக்கள் இருக்கின்றன. கவனத்தோடு செல்லுங் கள்'' என்று கூறி, கூப்பிய கைகளைப் பிரிக்காதவாறு, ஊர்வலம் மறையும் வரை அங்கேயே நின்றார்கள்.

முதலாவது கள்ளர் பற்றை விட்டுச் சென்ற திரு வரங்கன் ஊர்வலம் இரு நாள் வரை எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் சென்று கொண்டிருக்க பின்னை உலகாசிரியர் சற்று தூரம் முன்பாக, தமது சிடர்களுடன் நடந்து கொண்டிருந்தார்.

மூன்றும் நாள் மாலையில் அப்படிச் செல்லும் வேளையில் ''கீகீ'' என்று தலை மேலே ஒருபறவையின் அபயக் குரல் கேட்கவே, ''என்ன இது?'' என்று பார்க்கையில் கூர குலோத்தம தாச நாயனார் என்பார் ''சுவாமி! இது நம் அரங்கனுடன் வரும் ராஜகிளி அல்லவோ! நம்மை அது இனங்கண்டு அழைக்கிறதே என்று கூறினார்.

அவர் அப்படிச் சொல்லும் போதே, ராஜகிளி பின் நோக்கிப் பறந்து செல்வதைப் பார்த்த உலகாசிரியர் ''அரங்கனுக்கு ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும்'' என்று தீர்மானித்து சிடர்களுடன் பின் திரும்பி விரைந்து செல்லலானார்.

ஊர்வலத்தைச் சீக்கிரம் அவர் அடைந்த போது, அங்கே தோன்றியிருந்த காட்சியைக் கண்டு திடுக்கிட்டு நின்றார். பல்லக்கையும், பெட்டகங்களையும் சுற்றி ஒரு பெரிய கள்வர் கூட்டம் சூழ்ந்திருப்பதையும், அரங்கனின்

பரிசனங்கள் அவர்களுக்குப் பயந்து மௌனமாய் அமர்ந்திருப்பதையும் பரிசனங்களில் மூவரைக் கள்வர்கள் அடித்துக் கீழே தள்ளியிருப்பதையும் சோகத்துடன் அவர் பார்க்க நேர்ந்தது.

கள்வர் தலைவன் கையில் வேலொடு நின்று கொண்டிருக்க அவனது அடியாட்கள் ஆபரணப் பெட்டகங்களைத் தூக்கி எடுக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

''அப்பா'' என்று குரல் எழுப்பிய உலகாசிரியர் கள்வர் தலைவனை நோக்கி, ''இவை எல்லாம் திருவரங்கன் சொத்துக்கள் அப்பா! அவைகளை எடுத்துச் செல்வது பாபம்!'' என்று கூற, தலைவனும் அவரை நோக்கி, ''பாபந்தான் சுவாமி! பாபத்தைப் பார்த்தால் நாங்கள் வாழ முடியுமா?'' என்று கேட்டான்.

''அப்பா, வாழ்வதற்கு வழியா இல்லை? நினைத்தால் எத்தனையோ வழி இருக்கிறதே'' என்று அவர் சொல்லும் போது, ''சுவாமி, அவரவர் எல்லைக்குள் வந்த சொத்துக்களை அபகரிப்பது அவரவர்களின் உரிமையாயிற்றே! நாங்கள் இந்தக் காட்டைப் பங்கு போட்டுக் கொண்டு அரசுரிமை செய்து வருகிறோம். ஆகவே எங்கள் எல்லைக்குள் வந்த சொத்துக்களை நாங்கள் பறித்துக் கொள்கிறோம்'' என்று கூறினன்.

உலகாசிரியர் பலவித நியாயங்களை எடுத்துக் கூறியும் அதைப் பொருட்படுத்தாத தலைவன் அந்தப் பெட்டகங்களைத் தூக்கிச் செல்லும்படி அடியாட்களுக்கு உத்தரவு இடவே, பொறுமை இழந்த ஆசிரியர், ''பாபிகாள், அரங்கனது செல்வத்தை எடுத்துச் செல்கிறீர்கள். உங்களுக்கு மேலுலகச் செல்வம் கிடையாது!'' என்று கூறி, ''இந்தாருங்கள் இவைகளையும் எடுத்துச் செல்லுங்கள்'' என்று சொல்லித் தம் காதில் அணிந்திருந்த கடுக்கன்களையும், கையில் தரித்திருந்த தோடாக்களையும், கணை

யாழிகளையும் கழற்றி அவர்கள் முன்னே வீசி எறிந்துவிட்டு, ''போங்கள்! போங்கள்! இதோடு போய் விடுங்கள்!'' என்று கத்தினூர்'

அனைத்தையும் எடுத்துக் கொண்ட கள்வர் தலைவன் அந்த இடத்தை விட்டு அகலாமல் நேரே திருவரங்கன் இருக்கும் பல்லக்குக்குச் சென்று, அருகிலுள்ளோர் தடுப்பதையும் பொருட்படுத்தாது பல்லக்கின் திரையை நீக்கினூன்.

அப்போது உலகாசிரியர் ஓடி வந்து, ''அப்பா! இன்று நீ பெற்ற பரிசில் ஏழு தலைமுறைக்குக் காணுமே. இன்னும் என்ன வேண்டும்?'' என்று கேட்க, ''இவையும் வேண்டும்'' என்று பெருமாளின்மீது இருக்கும் ஆபரணங்களையும் அவன் கேட்க, சினம்பொங்கிய உலகாசிரியர் மனம் பொருமிக் கொண்டு அவைகளையும் கழற்றிக் கொடுத்தார்.

அப்படியும் தலைவன் போகாமல் இருப்பதைக் கண்ட ஆசிரியர், ''இன்னும் ஏன் நிற்கிருய்?'' என்று கேட்க, ''நாச்சிமார் தாலிகளும், பெருமாளின் தங்கப் பூணூலும் எஞ்சியிருக்கின்றனவே?'' என்று அவன் கூற, மேலும் கோபம் கொண்ட உலகாசிரியர், ''பாபிகாள்! உங்களுக்கு நற்கதி நிச்சயம் கிட்டாது'' என்று கூறி, நாச்சிமார்கள் கழுத்தில் மஞ்சட் கயிறுகளையும், பெருமாள் உடம்பில் பருத்திப் பூணூலையும் தொங்க விட்டு மற்றுமுள்ள பொன் ஆபரணங்களை அவனிடம் கழற்றிக் கொடுத்து விட்டு, ''ம், கிளம்புங்கள்'' என்று கூறி பரிவாரங்களைக் கிளப்பிக் கொண்டு மேலே போகலானூர்.

இவ்விதம் திருவரங்கனேடு சென்ற அணிமணி, ஆபரணங்களும், இதர திரவியங்களும் தொண்டைமான் காட்டில் பறி போய் விடவே, எஞ்சிய வெறும் பரிவாரங்களோடும், வெறும் பல்லக்கோடும், ஊர்வலம் மேலே செல்ல ஆரம்பித்தது. (தொடரும்)

## உபய வேதாந்தப் பயிற்சி

இளைய தலைமுறைக்கு நம் ஸம்ப்ரதாய விஷயத்தில் ருசி பிறப்பித்து, உபயவேதாந்தத்திலும் பயிற்சி கொடுக்க வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் ஸ்ரீ உ. வே. A. K. சடகோபாசார்ய ஸ்வாமியால் 1968ம் வருடத்தில் சென்னை அம்பத்தூரில் "டிவைன் ஸயின்ஸ் டிரஸ்டு" [Divine Sceince Trust, 26 K. K. Road, Venkatapuram, Ambattur, Madras-600 053] என்று ஒரு ஸ்தாபனம் தொடங்கப்பட்டது. இதன் கிளைகள் ஸ்ரீ ரங்கம், திருவல்லிக்கேணி, திருக்குறுங்குடி, ஸ்ரீவில்லிபுத்தூர், காஞ்சீபுரம், மயிலாப்பூர் முதலான இடங்களில் உள்ளன, அவ்விடங்களில் திவ்யப்ரபந்த ஸ்தோத்ர பாட வகுப்புகள் இளைஞர்களுக்கு நடந்து வருகின்றன. இந்த டிரஸ்டின் ஆதரவில் முந்நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஆங்காங்குள்ள கிளைகளில் பயில்கின்றனர். மேலும், 'உபயவேதாந்த பாடசாலை' ஒன்று ஸ்ரீரங்கத்தில் வித்துவான் ஸ்ரீ உ. வே. R. நரஸிம்மாசார்ய ஸ்வாமியை உபாத்யாயராகக் கொண்டு நடந்து வருகிறது. இந்த டிரஸ்டின் நடவடிக்கைகளை மேலும் தீவிரப் படுத்த ஸ்ரீ K. B. தேவராஜன் அவர்களை Director ஆகக் கொண்டு 'Institute for the Revival of Ubayavedantha' என்றொரு ஸ்தாபனம் தொடங்கப் பட்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் :— ஆங்காங்குள்ள இளைஞர்களைத் திரட்டி அவர்களுக்கு வாரம் ஒருமுறையாவது உபயவேதாந்தக் கருத்துக்களைத் தக்க ஆசிரியரைக் கொண்டு போதிப்பதாகும். இப்படி ஏற்பாடு பண்ணி உபயவேதாந்தக் கருத்துக்களைப் புகட்ட வல்லமையுடையவர்கள் இந்த டிரஸ்டுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரார்த்திக்கப்படு கிறார்கள்.

# திவ்ய தேசங்களில் நித்யாநுஸந்தான ஸேவை

இவ்ய தேசங்களில் நித்யாநு ஸந்தான கோஷ்டிக்குச் சென்று கைங்கர்யம் செய்யும் அதிகாரிகள் குறைந்து வருகிறார்கள். சில இவ்யதேசங்களில் இக்கைங்கர்யம் நடைபெறுவதேயில்லை. ''அருளிச் செயல் பித்தனாகிய எம்பெருமான் ஆழ்வார்களின் செவிக்கினிய செஞ்சொல்லை தினமும் திருச்செவி சாத்தவேணும்'' என்று திருவுள்ளம் பற்றிய பூருவர்கள் எல்லா இவ்ய தேசத்திலும் நித்யாநுஸந்தான கோஷ்டியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு இவ்யதேசத்திலும் நித்யாநுஸந்தான கோஷ்டி அவசியம் நடைபெறவேணும். இது விஷயமாக ''டிவைன் ஸயின்ஸ் டிரஸ்டு'' ஸ்தாபனத்தார் ஓர் திட்டமிட்டிருக்கிறார்கள். அதாவது — நித்யாநு ஸந்தானம் தெரிந்து கொண்டு அந்தந்த இவ்ய தேசங்களில் நித்யாநு ஸந்தான கோஷ்டியில் தினமும் அந்வயிக்கும் ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவ இளைஞருக்கும் நாள் ஒன்றுக்கு 0.50 பை வீதம் ஊக்க அன்பளிப்பு அளிப்பதாக உத்தேசித்துள்ளார்கள். ஒவ்வொரு இவ்ய தேசத்திலும் நித்யாநுஸந்தான கோஷ்டி விலக்ஷணமாய் நடைபெறவேணும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்குமாகும். ஆகவே அந்தந்த இவ்யதேசங்களில் ஸ்ரீ வைஷ்ணவ இளைஞர்கள் நித்யாநு ஸந்தான கோஷ்டியில் அந்வயித்து, இம்மை மறுமைகளைப் பெற்றுப் பயனடைய வேண்டும். நித்யாநு ஸந்தானம் தெரியாத சிறுவர்களும் விரைவில் யோக்யதையை ஸம்பாதித்து கோஷ்டியில் அந்வயிக்க வேண்டும். இதன்படி அந்தந்த இவ்யதேசங்களில் உள்ள அத்யாபக கோஷ்டி நிர்வாஹர்கள் பொறுப்பேற்று, நித்யாநு ஸந்தான கோஷ்டியை நியதமாக நடத்த முன் வருவார்களேயானால் அவர்கள் ''நிர்வாக டிரஸ்டி, 'டிவைன் ஸயின்ஸ் டிரஸ்டு', 26, கள்ளிக்குப்பம் ரோடு, அம்பத்தூர், சென்னை-600 053,'' என்னும் விலாசத்துக்குக் கடிதப் போக்குவரத்து கொள்ளும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

# கண்ணன் கதைகள்

## தீபம். நா. பார்த்தசாரதி

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி அது. நளகூபன், மணிக்கிரீவன் இருவரும் குபேரனின் புதல்வர்கள். அழகும் இளமையும் நிறைந்த அவர்கள் ஒரு சமயம் சிவபெருமானின் அருளைப் பெறுவதற்காகக் கைலாய மலைக்குச் சென்று வழிபாடு நடத்தி வந்தார்கள். அந்தச் சமயத்தில் இளமையும், செல்வச் செருக்கும் அவர்களைத் தகாத செயல்களைச் செய்யத் தூண்டின. ஒருநாள் கங்கைக் கரையில் ஒரு தாமரைக் குளத்தில் வானுலகத்து இளம் பெண்களுடன் மதுவருந்தி, மலர்கள் சூடி, இன்பம் நிறைந்த நீர் விளையாடலில் ஈடுபட்டிருந்தனர் அவர்கள். கட்டழகு மிக்க உடலும், இன்ப மதர்ப்பும், மதுவுண்ட வெறியும், அந்த வானுலகத்துப் பெண்களைத் தம் நிலை மறக்கச் செய்திருந்தன. ஆடையின்றி உறை கழித்த யாழ்களைப் போல் அவர்கள் குளத்தில் நின்று கொண்டிருந்தனர். நளகூபனும் மணிக்கிரீவனும் கூட அதே நிலையில்தான் இருந்தனர்.

அந்தச் சமயத்தில் தேவலோகத்துத் தெய்வீக இன்னிசை வாணராகிய நாரதமுனிவர் அங்கே வந்தார். இயற்கையாகவே பெண்களுக்கு ஒரு குணம் உண்டு. என்னதான் தம்மை மறந்த நிலையில் இருந்தாலும் நாணம், வெட்கம், போன்ற பிறவி உணர்ச்சிகள் அவர்களைக் காத்துவிடுகின்றன. திடீரென்று அந்த அலங்கோலமான நிலையில் நாரதமுனிவரை அங்கே பார்த்தவுடன் அவசர அவசரமாக ஆடைகளை எடுத்து உடலை மறைத்துக் கொண்டு மரியாதையாக ஒதுங்கி நின்றார்கள் அவர்கள்.

ஆனால் ஆண் பிள்ளைகளான நளகூபனும், மணிக்கிரீவனும், நாரதர் வரவைப் பொருட்படுத்தவுமில்லை, மரியாதை செய்யவுமில்லை. மதுவுண்ட வெறியில் வெற்றரையர்களாய்க் கண்டோர் அருவருக்கத் விதத்தில் அலங்கோலமாக நின்றனர் அவர்கள்.

இதைக் கண்ட நாரதருடைய விழிகள் நெருப்பெனச் சிவந்தன. செல்வச் செருக்கினாலும் நிலைதவறிய காமக் களியாட்டாலும் குபேரனுடைய புதல்வர்கள் தனக்கு அவமரியாதை செய்வதை அவர் உணர்ந்தார்.

''அடே அற்பர்களே! உங்கள் இறுமாப்பிற்குச் சரியான படி புத்தி கற்பிக்கின்றேன். உங்கள் சிரிப்புக்கள் மரியாதைகள், செல்வங்கள், எல்லாம் அழிந்தொழிந்து இரட்டை மருத மரங்களாக நந்தகோபர் வீட்டு முற்றத்தில் ஆயர்பாடி மண்ணிற் போய்த் தோன்றி வளருவீர்கள். நீங்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் கண்ணன் கடவுட் பிறவியாக மண்ணில் பிறக்கும் போது அவனுடைய இளந் திருவடிகள் உங்கள்மேல் தீண்டப் பெறுதலால் சாபம் நீங்கிப் பழைய உருப்பெற்று மீண்டும் விண்ணுலகத்தை அடையலாம்''—என்று நாரதரிடமிருந்து சாபம் பிறந்தது.

—மருத மரத்தின் நடுவில் தன் இடுப்பில் பிணித்திருந்த உரல் சிக்கி மரங்கள் முறிந்து அவற்றினின்று நளகூபனும், மணிக்கிரீவனும் எழுந்து நின்றபோது இந்தப் பழைய வரலாற்றைத் தன் சிந்தையில் தானாக நினைத்துக் கொண்டான் கண்ணன்.

ஒரு கணம் தன்னுடைய சிறு குழந்தைத் தோற்றத்தை மாற்றிக் கொண்டு கடவுள் பேருருவாக அவர்களுக்குக் காட்சியளித்தான் கண்ணன்.

''குபேரனின் புதல்வர்களே! கந்தருவ இசை முனிவ ராகிய நாரதர் அருளால் இன்று உங்களுக்கு மறுபடியும் பழைய பதவி கிடைத்தது. இன்றுவரை மருத மரங்களா யிருந்த நீங்கள் என்னுல் சாப விடுதலை பெற்றீர்கள். இனி எக்காலத்திலும் பெரியோரைப் பேணிப் பண்பிலிருந்து நீங் காமல் நெறியோடு வாழ்ந்து இன்புறுவீர்களாக''—என்று நளகூப, மணிக்கிரீவர்களுக்கு அருளுரை வழங்கினுன் கண்ணன்.

''எம்பெருமானே! சிற்றறிவினை உடையவர்களாகிய யாங்கள் அவ்வாறே செய்கிறேம்'' — என்று கூறிக் கண்ணனைச் சுற்றி வலம் வந்து மீண்டும் வணங்கினர்கள் அவர்கள்.

அவ்வளவில் வானுலகிற் குபேர நாட்டுக் கோநகரி லிருந்து இரண்டு ஒளி மயமான விமானங்கள் போந்து அவர் களை அழைத்துச் சென்றன. அவர்கள் கூப்பிய கரங்களோடு விமானத்தில் ஏறியமர்ந்து சென்றனர். கண்ணன் மறுபடி யும் குழந்தையாக மாறினுன். மற்றொரு நாள் கண்ணன் தன் வயதுச் சிறுவர்களோடு கோகுலத்து வீதியில் விளையாடி கொண்டிருந்தான். அப்போது வயதான கிழவி ஒருத்தி சுவை யும், திரட்சியும் நிறைந்த நாவற்பழங்களைக் கூடையில் நிரப்பித் தானியத்தை விலையாகப் பெற்றுக் கொண்டு விற்பனை செய்து வந்தாள்.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த எல்லாச் சிறு பிள்ளைகளும் தங்கள் தங்கள் வீட்டிற்கு ஓடிப்போய் இரு கை களும் நிறையத் தானிய மணிகளை அள்ளிக் கொண்டு வந்து கிழவியிடம் கொடுத்து நாவற் பழங்கள் வாங்கத் தலைப் பட்டனர்.

கண்ணனும் தன் வீட்டிற்கு ஓடிச் சென்று தன் பிஞ்சுக் கரங்கள் நிறையத் தானிய மணிகளை அள்ளிக் கொண்டு

தெருவில் வேகமாகக் குதித்தோடி வந்தான். ஆனால் கிழவி எந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு பழம் விற்றாளோ அந்த இடத்தை அடைவதற்குள் கைவிரல்களினூடே உள்ள இடைவெளி வழியாக எல்லாத் தானியங்களும் தெருவில் சிந்திவிட்டன. அவன் கிழவியின் பக்கத்தில் போய்ப் பழத்திற்காக நின்றபோது இரண்டு உள்ளங்கைகளும் வெறுமையாக இருந்தன. கிழவி அவன் கைகளைப் பார்த்தாய் பின்பு முகத்தைப் பார்த்தாள்.

தானியம் பெற்றுக் கொள்ளாமல் எப்படி இலவசமாக நாவற்பழம் கொடுப்பதென்று அவள் சிந்தித்தாள். ஆனால் உலகத்து அழகெல்லாம் ஒன்று திரண்டது போன்ற அந்தக் குழந்தையின் முகமும், அதில் நிலவிய அருள் ஒளியும், அவள் உள்ளத்தைக் கவர்ந்தன. கண்ணனை அருகில் அழைத்துத் தழுவி உச்சி மோந்தாள். கூடையிலிருந்த பழங்களில் நல்லவையாகப் பொறுக்கிக் கண்ணனின் கை நிறையக் கொடுத்தாள்.

அவள் அவற்றைக் கொடுப்பதற்கு முன் கண்ணன் தன் கை இடுக்குகளில் கீழே விழாமல் ஒட்டிக் கொண்டிருந்த இரண்டொரு தானிய மணிகளை அவளுடைய தானியக் கூடையில் உதறினான். சிறிய விலையானாலும் அதைக் கொடுத்தவனின் பெருந்தன்மையினால்—பெரிய மனத்தினால் அந்தச் சில தானிய மணிகள், மாணிக்க மணிகளாக மாறி உதிர்ந்தன. அதைக் கண்டு பெரிதும் வியப்படைந்த கிழவி குழந்தையின் கைகளைத் தன் கண்களில் கிடைத்த கொண்டு சென்றாள். கண்ணன் தனக்குக் கிடைத்த அருமையான நாவற் பழங்களைத் தன் நண்பர்களாகிய சிறுவர்களோடு பகிர்ந்து கொண்டு உண்ணத் தொடங்கினான்.

இப்படியிருக்கையில் நந்தகோபர் முதலியவர்கள் கோகுலத்திலிருந்து பிருந்தாவனத்திற்குக் குடியேறும்படியான நிலை ஏற்பட்டது. கோகுலத்தில் சிறுவனான கண்ணனுக்கு அடுத்தடுத்துப் பல தீமைகள் ஏற்படுகின்றனவே! அன்றொரு நாள் மருத மரங்கள் முறிந்து விழுந்தன. அதற்கு முன் பூதனையும், சகடாசுரனும், துன்பம் செய்து குழந்தையைக் கொல்ல முயன்றார்கள். ஏதாவது இடம் 'மாறினாலாவது இந்தத் துன்பங்கள் குறைந்தாலும் குறையலாம்—என்றெண்ணிப் பலவாறு சிந்தித்து வருந்திக் கொண்டிருந்தனர் நந்தகோபர் யசோதை முதலியவர்கள்.

அப்போது 'சிறிது காலம் பிருந்தாவனத்திற்குச் சென்று இருக்கைகள் அமைத்துக் கொண்டு வசித்துப் பாருங்கள். உங்கள் துன்பம் குறைந்தாலும் குறையலாம்' – என்று ஒரு தெய்விகக் குறிப்புத் போன்ற சிந்தனை கிடைத்தது. உடனே பிருந்தாவனத்தில் தங்குவதற்குச் சிலஇருக்கைகள் அமைக்குமாறு உத்தரவிட்டார் நந்தகோபர். பிருந்தாவனத்தின் அழகிய சூழ்நிலையில் இருக்கைகள் அமைந்தன.

மங்கலம் நிறைந்ததொரு நல்ல நாளில் அவர்கள் பிருந்தாவனத்தில் குடியேறினார்கள். மரங்களும், செடி கொடிகளும், மலர் வனங்களும் நிறைந்த அந்த இயற்கைச் சூழ்நிலை கண்ணனுக்கும், அவனோடிருந்த சிறுவர்களுக்கும் மிகவும் பிடித்திருந்தது. ஆறுகளும், ஓடைகளும், குளிர்ந்த சூழ்நிலையை உண்டாக்கியிருந்தன. காண அழகிய நிறமுடைய பல பறவைகள் எங்கும் பறந்து கொண்டிருந்தன. வளம் நிறைந்த பிருந்தாவனத்து முல்லை நிலத்தில் கோகுலத்தின் புதிய வாழ்க்கை தொடங்கியது.

(தொடரும்)

# திக்குறளை சென்றோதோம்

எம்பெருமானார் திருவடிகளில் சிலர் திருப்பாவைக்குப் பொருள் அருளிச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்களாம்; ''திருப்பல்லாண்டுக்கு ஆள் கிடைக்கிலும் திருப்பாவைக்கு ஆள் கிடையாது; பத்து ஆழ்வார்களுடைய ஸாரபூதையான தானே சொல்லித் தானே கேட்க வேண்டு'' மென்று அவர்களுக்குப் பணித்தருளினாராம்; இவ்விஷயம், ஈராயிரப்படி வியாக்யானத்தின் முகவுரையில் காணப்படுகிறது. எல்லாவற்றையு மறியுமவரான எம்பெருமானார், இவ்வண்ணம் அருளியிருப்பதால், திருப்பாவையின் நுண்மை நன்கு விளங்குகின்றது காணலாம். திருப்பல்லாண்டினும் சிறந்தது திருப்பாவை யென்று தெரிவித்திருக்கிறார்.

---

## R. வேங்கடராமானுஜன்

---

திருப்பல்லாண்டு என்பது பெரியாழ்வார் அருளிச் செய்த முதல் பிரபந்தம். இதில் எம்பெருமானுடைய அழகையும் மென்மையையும் நோக்கித் தம்முடைய பேரன்பினால் அவனுக்கு என்ன விளையுமோ? என்று அஞ்சிக் காப்பிடுதல் கூறப்படுகிறது; 'யான் எனது' என்பதற்குரிய அறியாமை நீங்கி, 'எம்பெருமானுக்கே உரியோம் யாம்' என்றிருக்கும் நுண்ணிய அறிவினர், தங்களுடைய வாழ்ச்சியில் மனம் வைக்காமல், எம்பெருமானுடைய வாழ்ச்சியிலே மனம் வைப்பார்கள்; அம்முறையில், ஆழ்வார், தம்முடைய வாழ்ச்சியில் மனம் வைக்காமல் எம்பெருமானுடைய வாழ்ச்சியில் மனம் வைத்து, ''மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன் சேவடி செவ்வி திருக்காப்பு'' என்று அவனுக்குக் காப்பிடுகின்றார். உன்னுடைய செந்தாமரை போன்ற திருவடிகளின் அழகு என்றும் மாறாமல் க்ஷேமமாக இருக்க வேண்டு மென்கிறார். இது, முதற்பாட்டில் கூறப்பட்ட விஷயம். இரண்டாம்

பாட்டில், 'அடியோங்களுக்கும் உனக்கு முண்டான தொடர்பு நீங்காமல் என்று மிருத்தல் வேண்டு'மென்றும், 'வலமார்பில் வாழ்கின்ற மங்கையும் என்றும் கூடியிருத்தல் வேண்டு'மென்றும், 'உங்களுடைய சேர்த்திக்குப்பரிந்து நோக்குகின்ற திருவாழியாழ்வானும் பாஞ்சஜன்ய ஆழ்வானும் பல்லாண்டு காலம் வாழவேண்டு' மென்றும் வாழ்த்துக் கூறுகிருர். இது, எம்பெருமானுடைய அடியார் கட்குக் கூறும் வாழ்த்தாகும். இடையில், அடியார் பலருடன் கூடிவாழ்த்துவார் போன்று, எம்பெருமானை வாழ்த்துகின்ருர். இறுதியில், இப்பிரபந்தத்தைக் கற்றவர் கள் பல்லாண்டு காலம் எம்பெருமானைச் சூழ்ந்திருந்து ஏத்து வாராவர் என்று வாழ்த்துக்கூறி முடிகின்ருர். இதில் இறைவனுடைய வாழ்ச்சியை முன்னும், அடியார்களின் வாழ்ச்சியைப் பின்னும் கூறியிருத்தலால், ஆழ்வார் இறைவனை முதன்மையாகப் பற்றினவர் என்பது புலனு கிறது.

ஸ்ரீ ஆண்டாள் பிராட்டியார், தம் ஆசார்யரான பெரியாழ்வாரை தெய்வமாகப்பற்றி ஒழுகுமவராவர்; ஆதலால், தாம் அருளிச் செய்த திருப்பாவையில் அடியார்களை முதன்மையாகவும் எம்பெருமானை அதற்குத் துணையாகவும் பற்றி நிற்கும் நிலையினை வெளியிடுகின்ருர். ,'சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்! வையத்து வாழ்வீர்கள்!'' என்று அடியார்களின் வாழ்ச்சியை முதற் கண் விரும்பியுள்ளார்; ''அன்றிவ்வுலக மளந்தாய் அடி போற்றி'' ''உனக்கே நாம் ஆட்செய்வோம்'' என்று இறுதியில் எம்பெருமானுடைய வாழ்ச்சியை விரும்பு கின்ருர்; இதனுல், மேற் கூறப்பட்ட விஷயம் புலனுவது காணலாம்.

முதற்பாட்டில் ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று அருளியிருக்கிருர்; இது, ஸ்வருப உபாய

பலங்களைக் குறிப்பதாகும். 'எம்பெருமானுக்கே உரியோமாம் யாம்; எமக்கு உரியோமல்லோம்' என்றிருத்தல் ஸ்வரூப உபாய எனப்படும். இதனை 'நமக்கே' என்ற பதத்தால் தெரிவித்துக் கொண்டார். அடுத்த பாட்டில் இப்படி ஸ்வரூபத்தையுணர்ந்தவர்கள் நடந்துகொள்ள வேண்டும் முறையினைத் தெரிவிக்கின்றார். அம்முறைகளில் ''தீக்குறளை சென்றோதோம்'' என்பது ஒன்று; இது இந்தக் கட்டுரைக்கு விஷயம்.

கண்ணபிரானிடத்தில் பேரன்பு கொண்டுள்ள இளவாய்ச்சியர், பலரும் சேர்ந்து கண்ணனை வழிபட்ட முறையில் பேசிச் செல்கின்றது திருப்பாவை. இங்ஙனம் பேசிச் செல்கின்ற முறையில் வேதாந்தக் கருத்துக்கள் பலவற்றையும் இதில் காணலாம்.

'வையத்து வாழ்வீர்கள்! நாமும், கண்ணனை அநுபவிக்க வேண்டுமென்றிருப் பார்க்கும், அவனுடைய அடியார்களை அநுபவிக்க வேண்டுமென்றிருப்பார்க்கும், அவர்கள் மனம் நிறைவுறும் படி அவற்றைப் பண்ணி, உய்யும் வழியை யெண்ணி யுகந்து, செய்யுஞ் செயல்களைக் கேண்மின்! பாற் கடலுள் அறிதுயிலமரும் பரமனுடைய திருப்பாதங்களைப் பத்தியுடன் பாடி, பால் நெய் முதலிய இனிய பொருள்களை உண்ண விரும்போம், காலையில் நீராடி, கண்ணுக்கு மையிடுதல், மலரையிட்டுத் தலையை அலங்கரித்தல் முதலியன செய்யோம்; பெரியோர்கள் செய்யாதன எவையும் செய்யோம்; தீக்குறளை சென்று ஓதோம் என்று கூறுகிறார்கள். இவையாவும் ஸ்வரூபத்திற்குத் தக்க செயல்களாம். ஐயமாவது பசித்தவர்க்கு சோறு இடுவது; இது, உள்ளுறை பொருளில் ஆசையுள்ளார்க்கு பகவத் விஷயத்தைக் கொடுப்பது என்பதாம். பிச்சையாவது பிரம்மசாரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் இடும் சோறு. தகுதியுடையார்க்கு பாகவத விஷயத்தை உணர்த்துவது என்பது

உள்ளுறை பொருளாம். இத் தன்மையானது அடியார்களாகிய நமக்கு இருக்கவேண்டும்; பெரியோர்கள் செய்வனவற்றையே செய்தல் வேண்டும்; எம்பெருமான் தவிர வேறு எந்த இனிமையும் நாம் விரும்பலாகாது என்று தெரிவித்துக்கொண்டு, பின்பு 'பிறர் நம்மைப்பற்றிக் கூறும் பழிமொழிகளையும் எம்பெருமானுக்குச் சென்று செவிப்படுத்தோம்' என்கிறார்கள் குறளை-பழிச்சொல். இது, பிறர் செய்யுங்குற்றங்களுக் கெல்லாம் உபலக்ஷணமாகும். பிறர் செய்த குற்றங்களை எம்பெருமானுக்குத் தெரிவிக்க மாட்டோம் என்பது பொருள். பிறர் செய்த குற்றங்களை எம்பெருமான் செவிப்படுத்தினால், அவன் திருவுள்ளம் புண்பட்டு அவர்களைத் தண்டிப்பான்; அதனால், அவர்களுக்குத் துன்பமுண்டாகும்; அத்தகைய தீய செயலை நாம் செய்ய மாட்டோம் என்பது இதனால் வெளிப்படுதல் காணலாம். இது பற்றியே ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை ''தீக்குறளை **சென்றோதோம்**—பிறர்க்கு அநர்த்தாவஹமாகப் போய் சொல்லமாட்டோம்; பிராட்டி, ஏகாக்ஷி ஏககர்ணி முதலான ராக்ஷஸிகள் நலிந்த படியைப் பெருமான் பக்கல் ஏகாந்தத்திலும் சொல்லிற்றாக ஸ்ரீ ராமாயணத்திலில்லையே'' என்று அருளியுள்ளார். ஸ்ரீமத்பிள்ளைலோகாசார்யர் ''பிராட்டி, ராக்ஷஸிகள்குற்றம் பெருமாளுக்கும் திருவடிக்கும் அறிவியாதாப் போலே, தனக்குப் பிறர் செய்த குற்றங்களைப் பகவத் பாகவத விஷயங்களில் அறிவிக்கக் கடவனல்லன்'' என்று ஸ்ரீவசன பூஷணத்தில் அருளியிருப்பதையும் காணலாம். இன்னாருக்கு என்றில்லாமல் 'சென்றோதோம், என்று பொதுப்படக் கூறியிருத்தலால் பாகவத விஷயத்திலும் தெரிவிக்கலாகாது என்பது பெறப்பட்டது.

குற்றங்களை எம்பெருமான் செவிப்படுத்தா விட்டாலும் அவன் அறியுந் தன்மையனாதலால் குற்றங்களை அவனுக்கு அறிவியாமையால் பயனில்லை. ஆதலால், குற்றங்களை மறந்து விடுதல் வேண்டுமென்பது இதன் கருத்தாக

அமையும். இதனையுட் கொண்டே ''தன் விஷயமாகப் பிறர் செய்த குற்றங்களை மறந்தும் பகவத் விஷயத்திலாதல் பாகவத விஷயத்திலாதல் விண்ணப்பஞ் செய்யக் கடவனல்லன்'' என்று மணவாள மாமுனிகள் வியாக்யானஞ் செய்தருளினார் என்பது தெரிகிறது. இந்தக் கருத்து திருக்குறளில் நன்கு விளங்குகின்றது.

**''இன்னாசெய்தாரை யொறுத்தலவர் நாண**
**நன்னயஞ் செய்து விடல்.''**

என்கிறார் திருவள்ளுவனார். தமக்குத் துன்பங்களைச் செய்தவர்களைத் தண்டித்தலாவது, அவர்களே நாணும்படி அவர்களுக்கு இனிய நன்மைகளைச் செய்து, பின்பு அவர்கள் செய்த துன்பங்களையும், தாங்கள் அவர்களுக்குச் செய்த நன்மைகளையும் மறந்து விடுதல் வேண்டுமென்று கூறியிருக்கிறார். அவற்றை மறவா விட்டால் பின்பு அவை நினைவிற்கு வந்து, இன்னா செய்தாரைத் தண்டிக்க முயலலாம். விடல்—விடுக; எவற்றை என்ற கேள்வியில், இரண்டையும் விடல் என்பது கிடைக்கப்பெறும். இதனால், பிறர் செய்த குற்றங்களை மறந்து விடுதல் வேண்டுமென்பதும், அவர்க்கு நன்மைகளைச் செய்தல் வேண்டு மென்பதும், பிறர் குற்றங்களை இறைவனுக்கும் அடியார்களுக்கும் தெரிவிக்கலாகாது என்பதும் திருவள்ளுவரின் கருத்தா விளங்குகவதும் காணலாம். ஆகவே இத்தகைய கருணையானது ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய குணமாகும் என்பதை இந்தக் கட்டுரை தெரிவிக்கின்றது என்று கொள்க.

ஸ்ரீ

கா. அ. காளியப்ப முதலியார் சந்தா எண் : 2252.
உலகாரிய நிலயம், செங்குந்தர் தெரு, திருப்பத்தூர், வ.ஆ ஜி

கீதாசார்யன் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் செய்து எழுதிக் கொள்வது. நாளது வைாசி மாத 32ந் ''கீதாசார்யன்'' கிடைக்கப் பெற்று அதில் பக்கங்கள் 17 முதல் 23 வரையில் ''எம்பெருமானும் எம்பெருமானாரும்'' என்ற என்ற தலைப்பின் கீழ் திரு. வேணுகோபால் நாயகர் B A.B.L அவர்கள் எழுதியுள்ள கட்டுரையை கூர்ந்து வாசித்ததில் கீழ் வரும் மாறுதலான விஷயங்கள் காணப்படுகின்றன. பல வருஷங்களுக்கு முன் ஸ்ரீபெரும்பூதூருக்கு சித்திரையில் செய்ய திருவாதிரை எம்பெருமானார் உற்சவங்களுக்கு பிரதி வருஷம் சென்னை அண்டுகோ வகை Late H. R. E. மந்திரி வெங்கடசாமி நாயுடு இல்லத்தில் இருந்து கொண்டு எம்மடி ஸ்வாமி இராமாநுஜ கூட்டத்தில் மாலை 4 to 6 வரை நடக்கும் உபந்நியாசங்களில் இருவரும் ½ மணி காலம் பேசினதை அடியேன் கேட்டிருக்கிறேன். அக்காலத்தில் இருந்த விஷயங்கள் தான் நாளிது வரையில் செய்யும் ப்ரசங்கத்திலும் வெளியாகிறது. சென்னை ''ஸ்ரீவைஷ்ணவ மகாநாட்டுக்கு'' காரியதரிசியாகவும் இருப்பது அடியேன் அறிவேன்.

அன்னார் கட்டுரையில் அடியேன் காணும் மாற்றங்கள் வருமாறு:

1. மதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமான் கோயிலண்டை பெரிய நம்பிகளிடம் உடையவர் ஆச்ரயித்து துவய மந்திரம் கற்றார்.

இதன் உண்மை. திருமந்திரம் துவயம் சரமச்லோகம் மூன்றும்தான் சம்ப்ரதாயப்படி நடப்பது.

2 பெரிய திருமந்திரம் ஓம் நமோ நாராயணாய என்பதின் உட்பொருளைக் கற்க திருக்கோட்டியூர் நம்பிகளிடம் 17 + 1 ஆக 18 தடவை சென்று உட்பொருளை அறிந்தார்.

இதன் உண்மை — உடையவர் திருக்கோட்டியூர் நம்பி களிடம் தெரிந்து கொண்டது சரமச்லோகத்தின் உட் பொருளே.

**இதற்கு ஆதாரம்** முமுக்ஷுப்படி சரமச்லோக ப்ரகரணம்

வ்யாக்யான அவதாரிகையில் ஸ்ரீமணவாள மாமுனிகள் "இதில் அர்த்தம் கேட்பதற்காகவிறே எம்பெருமானார் 18 பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று" என்பது.

3. வதரியாச்ரமத்தில் எம்பெருமான் திருமந்திரத்தை நரனாகவும் நாராயணனாகவும், ஒரு **நரன்** (மனிதன்) கிடையாமையாலே தன்னையே இரு கூறாக ஆக்கிக் கொண்டு திருமந்திரத்தை வெளியிட்டருளினான்.

இதன் உண்மை — முமுக்ஷுப்படியில்-தானே சிஷ்யனாய் நின்றது சிஷ்யன் இருக்கும் இருப்பு நாட்டார் அறியாமை யாலே அத்தை அறிவிக்கைக்காக-என்றுளது.

அடியேன் வேண்டுகோள்—

கீதாசார்யனுக்கு கட்டுரை எழுதுகிறவர்கள் ஸ்ரீமான் உ. வே. P. B. A. ஆசார்யஸ்வாமிகளால் வித்வான்கள் என்று அங்கீரிக்கப்பட்டவர்களாயிருந்தால் அக்கட்டுரைகளை சோதிக்காமலே பதிப்பித்து விடலாம். ஆனால் கீதாசார் யனுக்கு புதியவர்கள் B.A, M.A, B.L. பட்டம் பெற்றவர் களாயினும் சம்ப்ரதாயத்தில் ஈடுபடாதவர்களாய் கட்டுரை கள் எழுதினால் அதற்கு முன்னேடியாக பரிசீலித்து பதிப் பிற்கு ஏற்றினால் கீதாசார்யனுக்கு நாளுக்கு நாள் முன்னேற் றத்தில் குறை இருக்காது.

இதன் நகல் காஞ்சிபுரம் ஸ்ரீமான் P. B. A. ஆசார்ய ஸ்வாமிகளுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. இந்த குறிப்பு களில் குற்றம் குறைகள் இருந்தால் க்ஷமிக்கப் பிரார்த்திக் கிறேன்.

அடியேன் **ராமாநுஜதாஸன்**

**K. A. காளியப்ப முதலியார்**

# அன்புள்ள கீதாசார்யரே!

**பூமிகா** **சென்னை**

ஒருவராலும் அங்கீகரிக்க முடியாத கருத்துக்களைக் கூறும்
திருவாளர் மேத்தாவைத் தகுந்த முறையில் கண்டித்து
பொருத்தமான நற்சான்றுகளை காட்டி, எங்களை மிகவும்
அருமையாகக் கவர்ந்து அறிய வேண்டிய உண்மைகளைச்
சுருக்கமாக தெரியவைத்து, சரித்திரம் படைத்து, ஈடில்லாப்
பெருமையுடன் கவின்மிகு கீதாசார்யன் நீடு வாழ்கவே!

**ராஜகோபாலன்** **பாம்பே**

கீதாசார்யனுக்கு திரு. மேத்தா எழுதியுள்ள பதில் கீதாசார்யனில் வெளிவந்துள்ளதே தவிர, விகடனில் வரவில்லையே. மேலும் மேத்தாவின் பதிலும் தெளிவாக இல்லையே. ஆயினும் அவர் குறிப்பிட்டபடி, விரைவில் விளக்கமான பதிலை விகடனில் எதிர்பார்ப்போம்.

**ரங்கநாதன்** **சென்னை-33**

வைகாசி இதழில் அரிமேய விண்ணகரப் பெருமாளின் திருவுருவம் தெளிவாகவேயில்லை. கீதாசார்யனின் சிறப்பு அம்சமான அட்டையில் குறைவைக்காதீர்கள். சற்றுக் கவனமாக இருங்கள்.

**நா. சுந்தரம்** **பெங்களூர்**

பரிஓட்டக் குழாத்தின் விளம்பரத்தை கீதாசார்யனில் வெளியிடுவது அவசியந்தானா?